
# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்


பதிவு இல:
ISSN 2792-1026

+94776391188 www.skymediasl.com skytamil.lk@gmail.com

மாதமிருமுறை இதழ் - 11 05 ஜூலை 2021 @skytamil.lk

மாசடைந்து வரும் இலங்கைத்தீவின் கடல்வளமும் நமது மௌனங்களும்...!



யாழ்.பல்கலையில் புதிய பீடங்கள்! 02



கல்வியை இடைநிறுத்தி திருமணம் செய்து வைக்கும் பெற்றோர்கள்



முத்தமிழ் கலசம் எனும் பல்சுவை இதழ் ஓர் பார்வை



முதல் பிரதிகளை பெற்ற கின்னஸ் சாதனையாளர் என்ற பட்டத்தை வென்ற

## ஹாசிம் உமர்

அவர்களுடனான நேர்காணல்



## கல்வியை இடைநிறுத்தி திருமணம் செய்து வைக்கும் பெற்றோர்கள்

பாத்திமா நுஹா நிஸார்

08 பக்கம்

10 பக்கம்

## யாழ்.பல்கலையில் புதிய பீடங்கள்!

02





## மாசடைந்து வரும் இலங்கைத்தீவின் கடல்வளமும் நமது மௌனங்களும்...!

முஹம்மட் ஹாசில் (ஊடகவியலாளர்)

18 பக்கம்

21 பக்கம்

## முத்தமிழ் கலசம்

எனும் பல்சுவை இதழ் ஓர் பார்வை





முதல் பிரதிகளை பெற்ற கின்னஸ் சாதனையாளர் என்ற பட்டத்தை வென்ற

## புரவலர் ஹாஷிம் உமர்

அவர்களுடனான நேர்காணல்

22 பக்கம்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்


**பிரதம ஆசிரியர்:**

ஜே.எம்.பாஸித்

**இணையாசிரியர்:**

நுஸைலா பதுர்தீன்
பாத்திமா ஷிப்னா ஆதம்

**நிர்வாக குழு:**

றொஸான் முஹம்மட்
அஸ்வர் ரிஸ்வி

**ஆசிரியர் குழு :**

எம்.நஸ்றீன் பானு
பாத்திமா சிரோணி
பஹ்ரியா பாயிஸ்
ஷஹ்னா ஸப்வான்
பாஷிரா ஜுனைடீன் - ஊடகவியலாளர்
முஹம்மட் ஹாசில் - ஊடகவியலாளர்
நியாஸ் பரீட் (சிராஜி) - கத்தார்
ஆர்.எம்.சப்ராஸ் - ஊடகவியலாளர்
அகீப் நஸுர் - Graphic Designer
தி.தர்சினி
எம்.ஜ.எம். முபீத்
எம்.பஹ்த் ஜுனைட் - ஊடகவியலாளர்
ஷகீனா ஷாகிர்

**ஆலோசகர்கள் :**

கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம். பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
ரிம்ஸா முஹம்மத் - எழுத்தாளர்
அமின் மொஹமெட் (தமிழ்நெஞ்சம்)
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்
வாக்கிர் பாரிஸ் - Faby's Product


இறைவனின் அருளாலும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே

*அல்ஹம்துலில்லாஹ்!*

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசியர்குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.



**ஜே.எம்.பாஸித்**
**பணிப்பாளர்**
**ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை**

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனில் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்


+94776391188

www.skymediasl.com skytamil.lk@gmail.com


விரைவில்...

GET IT ON Google Play | Available on the App Store

#Thuninthelu #skytamil.lk skytamil.lk skytamil.lk

Scan QR Code

# தோழமைச் சிற்பிக்கு ஒரு சில வரிகள்



உறவே இது உனக்கான
வாழ்வன்றி வேறில்லை...
உன்னைச் செதுக்கும் சிற்பி
என்றுமே நீ தான்...

சிற்பியே நீயாய் இருக்க
ஒப்பனையை மட்டும்
ஏன் பிறரிடம்
எதிர்பார்க்கிறாய்?...

போகும் பாதை
பஞ்சானாலும்,
நஞ்சானலும் ...
நடப்பது என்றுமே

உன்
பாதங்கள் தான்...
முடியாது என்ற
ஒற்றை வழிப்
பாதையில் பயணிக்காது...
முடியும் என்ற
பெரும் பாதையில் பயணி...

உன் இலட்சியத்தின் விம்பமாய் ,
உன் முயற்சி
உன்னைப்
பின் தொடரும்
வரையில்...

தூற்றுதல்கள் என்றுமே
உன்
பாதையின் வழிப்போக்கர்களே...
தோல்வியினை உரசி ,
வெற்றி
வாகை தனைச் சூட...

இன்று என்ற அத்திவாரத்தை
செப்பனே போட்டுக் கொள்...
விடியல்கள் ஒவ்வொன்றும்
விண்மீன்களாய் அஸ்தமிக்கும்.

இன்ஷா அல்லாஹ்!!!

**ஹாஸ்மியா தாஹா
கலாவெவ**

# தாய்



கருவினில் எனை ஊட்டி
கலையுடன் பெற்ற நீ
காசியினில் இப்போது
களமிரக்கி விட்டாயே

நீ கொண்ட நேசங்கள்
அது போன்ற பாசங்கள் விடை பெற்ற
உன்னால் – அன்றி
விடிவுதான் யார் கொடுப்பார்

போரம்மா....... போரம்மா.......

பூமிதனில் எந்தனுக்கு
நான் படுத்த உன் மடியும்
நேரான வாழ்விற்கு உன் அடியும்

கலை போன்ற அன்னையே அன்றாக நீ
வரமாட்டாயா.....!!!



K.T.M.**றிஜாஸ்
ஊடகவியளாலர்,
அனுராதபுரம்,
கஹடகஸ்திகிலிய**




# மதி மயங்கும் போதை



துச்சங்கள் செய்து
இலட்சியம் கூட
பயணிக்க இருக்கும் காலமதில்
போதையில் மடிந்து விடாதே...

இளந்தளிரான நீ
இளமையைத் தொலைத்து
இழிவு நிலையில் இருக்கிறாய்...

கிளை பரப்பி நிழல் தர வேண்டிய நீ
வேர்களில் இருந்தே வேறாகி
வெறுமையாய் இருக்கிறாய்...

அற்ப இன்பத்தில் மதி மயங்கும் நீ
உன் பாதையை மாற்றும்
போதையை மறந்து விடு...

உனக்கான அன்பின் வாசல்கள்
தாராளமாய் திறந்து கிடக்கிறது
நீ செல்லும் வரையில்...

**தஹானி மரியம் சயான்**
**திஹாரிய**
**கதீஜத்துல் குப்ரா கல்லூரி மாணவி**



# அகங்காரம்

மற்றவர்களை தாழ்த்தி
தான் எழ நினைக்கும்
அனைவரும் வீழ்வது நிச்சயம்
என்னை விட யார் உயர்ந்தவர்கள்

என்று தன் நம்பிக்கை இருக்க வேண்டும்
ஆனால் தலைக்கனம் இருக்கக் கூடாது
நான் படித்தில்லையா

நான் முட்டாளா
எனக்குத் தெரியாதா
என்று அகங்காரம் கொண்டு
திரிபவர்களின்

பின் புலத்தை எடுத்து பார்த்தால்
அவர்கள் தான் வாழ்க்கையில் கீழ்
மட்டத்தில் இருப்பவர்கள்....

**அதீகா மஷ்ரீர்**
**ஹெம்மாதகமை**



# தோழமை

உற்ற நட்புகள் ஒரு மனிதனின் தனிப்பட்ட வாழ்விலும் சரி கூட்டு வாழ்விலும் சரி மிகப் பெரிய மாற்றங்களை கொண்டு வரும் வன்மை மிக்கவை.

நட்பு எல்லா விதமான சுயநல எண்ணங்களில் இருந்து விடு பட்டதாக இருந்திட வேண்டும். இது நட்பு வளரத் தேவையான முதல் நிபந்தனை எனலாம். உண்மையான நம்பிக்கையில் நேர்மையான நடத்தை நாணயமான செயல் இவற்றின் அடிப்படையில் நட்பு வளர்ந்திட வேண்டும் என்பதே முக்கியம்.

"என்னுடைய மாட்சிமை மீது அன்பு செலுத்துபவன் வேறு நிழலேதும் இல்லாத மறுமையில் என்னுடைய சிம்மாசனதின் நிழலில் இருப்பான் (அஹ்மத்)

அதாவது அல்லாஹ்வுக்காக அன்பு செலுத்தி நட்புக் கொள்வதன் சிறப்பு இந்த ஹதீஸில் விளங்கி கொள்ளலாம்.

தான் தேர்ந்தெடுக்கும் நண்பர்கள் நல்லவர்களாகவே ஆரம்பத்தில் தெரிவார்கள். ஒரு பிரச்சினையின் போதோ அல்லது ஆபத்தின் போதோ தான் உண்மையான நண்பர்களை நீர் அறிவீர்.

நட்பில் கால வரையறையின் நட்புக் கொள்வது எவ்வளவு முக்கியமோ அதே போல் ஒருவரை ஒருவர் புரிந்து உண்மையாக இருப்பதுவும் மிக முக்கியம் ஆகும். ஏனெனில் புரிந்துணர்வு இல்லாத நட்புக்கு முற்றுப்புள்ளி வேகமாக வந்து விடும்.

நல்ல நட்பு என்பது இறைவன் எமக்கு அளித்த உன்னதமான வரம் என்பதை மறந்து விடக்கூடாது. மறுமை நாளில் நல்ல நட்பு எவ்வளவு முக்கியம் பெருமோ அதேபோல் சுவர்க்கத்திலும் அதன் மகிமை வெளிப்படும்"நாம் சுவர்க்கத்திலிருந்து நம் நண்பரை சுவர்க்கத்தில் காணவில்லை என்று அல்லாஹ்விடம் கூறும் போது நரகத்தில் இருந்த நண்பன் சுவர்க்கத்தில் இருக்கும் நண்பரின் வேண்டுதலுக்காக இறைவன் நகரத்திலிருந்த நண்பனை விடுதலை செய்வான்". இப்படிப்பட்ட பாக்கியங்கள் நல்ல நட்புகளுக்கே கிடைத்து விடும். (என்றாலும் எம்மையும் எம் உறவுகளையும் நரக வேதனையிலிருந்து பாதுகாப்பு பெற வேண்டும்)

மனிதர்களிடம் ஆயிரம் வகை இருக்கின்றார்கள். அவர்களுள் நீங்கள் அறிமுகபடுத்தபட்டவர்களிடம் நீங்கள் நெருக்கமாக இருங்கள் யாருடைய அறிமுகம் உமக்கு கிடைக்க வில்லையோ அவரிடம் இருந்து விலகி இருங்கள் (புகாரி)

இந்த ஹதீஸ் உணர்த்துவது நம் நண்பர்கள் எனும் போது அவர்களுடன் அனைத்து விடயங்களிலும் அறிமுகம் ஆகி இருப்பது முக்கியமாகும் . இன்பத்திலும் துன்பத்திலும் தோள் கொடுப்பவனே உண்மையான தோழன்.
சிலவேலை நல்ல நட்புகளையும் தவற விடும் சந்தர்ப்பங்கள் அறிமுகம் இல்லாத தோழமைகளில் தான் உருவாகிறது.

எவ்வாறு இருந்தாலும் நல்ல நட்புடன் இருக்கும் போது நற்குணங்களும் நற்செயல்களும் செய்யவே மனம் இடம் கொடுக்கும் மாறாக தீய நட்புடன் இருக்கும் போது தீய எண்ணங்களும் தீய செயல்களும் செயற்படவே வழி வகுக்கும். இதற்கு நபி (ஸல்) சிறந்த உதாரணம் மூலம் விளக்கி இருக்கின்றார்கள்.

"நல்ல நண்பனுக்கு உதாரணம், கஸ்தூரி வியாபாரி போல் ஆகும். அவர் உமக்கு எதையும் தரா விட்டாலும் அதன் வாசனையாவது உம்மை வந்தடையும். தீய நண்பனுக்கு உதாரணம், கொல்லனின் கூளையைப் போல் ஆகும். நீர் அந்த கருமையில் இருந்து தப்பித்து கொண்டாலும் அதன் புகையாவது உம்மை வந்தடையும்." (அபூதாவூத்)

ஒருவரை புரிந்து கொள்ள வேண்டும் என்றால் அவனின் நண்பன் யார் என்று தெரிந்தால் அவன் எப்படி பட்டவன் என்று கூறலாம்.

மனிதர்களின் உறவுகள் பலவிதம் போலவே நட்புகளும் பலவிதம். விதவிதமாய் மாயம் ஆல் ஜோடிக்க பட்ட உலகில் அல்லாஹ்வுக்காக உண்மையான நேசத்துடன் நட்புறவாய் கடைசி வரை இருப்பவர்களே சிறந்த அதிஷ்டசாலிகள் இறைநேசத்துடன் இருந்து இம்மையிலும் மறுமையிலும் சிறந்த அதிஷ்டசாலிகலாய் திகழ அல்லாஹ் அனைவருக்கும் அருள் புரிய வேண்டும். (ஆமீன்)

**பாத்திமா முஷ்பிகா முன்சிர்**
**திஹாரிய**
**ஹாதியா கல்வி நிறுவன மாணவி**

துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

@skytamil.lk

மாதமிருமுறை | இதழ் - 11 | 5 ஜூலை 2021




# இயற்கையின் சீற்றமும் ஆறறிவுடைய தம் மானிடமும்

மனிதனின் அகோர முயற்சியாலும் தொழில்நுட்ப வளர்ச்சியாலும் இயற்கை எனும் கண் கண்ட தெய்வத்தை வெல்ல நினைத்தவனோ மனிதன் ஆனால் அதுவோ என்னைப் போன்று முற்று முழுதாக இந்த மானிட ஆக்கவே முடியாது என்று மறுபதிலிட்டது.

இந்த மானிடத்தின் செயற்கைக்கும் இயற்கைக்கும் நடந்த யுத்தத்தின் வெளிப்பாடே இன்று பற்பல வடிவங்களில் நம் கண் முன்னே தாண்டவம் ஆடிக்கொண்டு உள்ளது.

பல நுற்றாண்டுகளாகவும் யுக யுகங்களாகவும் ஆகவும் மனித வர்க்கத்தின் ஒரு பகுதியினரை தோற்கடித்து ஒரு சாரார் வென்றனர் இருப்பினும் அங்கு வென்றதோ தமது மானிடம் தான்.

ஆனால் இன்றோ!
நம் கண்களுக்குக் கூட புலப்படாத ஒரு நுண்ணுயிர்க்காக அன்று யுத்த களங்களிலும் உருக்கு வாள் உக்கும் துப்பாக்கி ரவைகளுக்கும் தைரியமாக நெஞ்சை நிமிர்த்தி போராடியவர்கள் கூட இன்று தான் உயிருடன் இருந்தால் போதும் என்ற அவல நிலையில் இருந்து கொண்டு பல நூறு கோடி உயிர்களை காவு கொடுத்த வண்ணம் உள்ளோம்.

இதற்கு எல்லாம் காரணம் இயற்கையை வெல்ல மானிடம் எடுத்த முயற்சியே!

சில வருடங்களுக்கு முன்போ விடியக் காலை எழுந்தவுடன் கரையும் காகங்கள் பாடும் குயில்கள் தூய்மையான காற்று பார்த்தாலே கண் கொள்ளை போகும் காலைக் காட்சிகள் மாலை ஆனவுடன் மைதானங்களிலும் வீதிகளிலும் அலை மோதிக் கொண்டு திரியும் சின்னஞ் சிறுசு களமும் அங்காங்கே மரத்தடியில் நின்று கொண்டு கதை பேசும் கூட்டங்களும் நினைத்தாலே இனிக்கும் கண் கொள்ளா காட்சிகள்.

செயற்கை எனும் ஆயுதம் கொண்டு மனிதனோ இயற்கை முறைகளை மாற்றிட முனைந்தான் ஆனால் அதுவோ உன்னால் அதனை நிவர்த்திக்க முடியாது என்பதை நம் கண் முன்னே காட்டி விட்டது.

அதன் விளைவே
பொழுதுபோக்கு என்று ஒன்றும் அதற்கு குறிப்பிட்ட நேரமும் தேவை என்று ஏங்கிய காலம் போய் இருக்கும் மொத்த நேரத்தையும் எவ்வாறு பொழுது போக்காக மாற்ற முடியும் என முனைந்து கொண்டு அப் பண்டைய கால முறையையும் இயற்கையையும் இரசித்து கொண்டு பின்பற்ற தொடங்கிறது எமது சமூகம்

இறுதி வரை பயனுள்ள முறையில் இவ் இயற்கையை உபயோகித்து எமது வருங்கால சந்ததியினர் வாழ வழி செய்வோம்.


**ஷர்பான்**
**அட்டாளைச்சேனை**




# ஹைக்கூக்கள்



மூடி மறைத்தது
வெளிச்சத்திற்கு வந்து விட்டது
ஊர் குளம்

சிறிய செடி
சாலையைக் கடக்கிறது
உதிர்ந்த இலை

அடர்ந்த விருட்சம்
தாவித் தாவி வளர்கிறது
சிறு குரங்கு

மஞ்சள் கோடு
வீதி ஒழுங்கை கடைபிடித்தபடி
சாய்ந்த மரம்.

வளர்ந்த பிள்ளை
அண்ணாந்து பார்க்க வேண்டும்
காய்க்கும் தென்னை.




**ரோஷான் ஏ.ஜிப்ரி**



# கல்வியை இடை நிறுத்தி

## திருமணம் செய்து வைக்கும் பெற்றோர்கள்

இப் பதிவு அனைத்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மற்றும் இல்லற வாழ்க்கையில் இணைந்திருக்கின்றவர்களுக்கும் இது சமர்ப்பணம். இதில் ஏதாவது தரக் குறைவாகவோ அல்லது மனம் புண்படும் வகையிலோ எழுதி இருந்தால் என்னை முதலில் மன்னித்துக் கொள்ளுங்கள். நான் இன்னும் மணமுடிக்கவில்லை தற்போது எனக்கு 17 வயது மட்டுமே. ஆனால், இதை எழுதுவதன் தேவைப்பாடு இருக்கின்றது. ஆகவே இதை எழுதினேன். என்னைப் பற்றி கூறும் போது உங்கள் மனதுக்குள் இப்படியான கேள்விகள் எழும்.

ஆம், நீங்கள் கூறுவது சரிதான் இதில் எனக்கு எவ்வித பயனும் இல்லை. ஆனால் இக்கட்டுரையை எழுதுவதன் நோக்கம் இதைப் படித்தாவது உங்கள் அனைவருக்கும் ஒரு மாற்றம் வர வேண்டும் என்பதற்காக மட்டுமே . இப் பதிவில் பதிவிடும் அனைத்தும் கற்பனையல்ல முற்று முழுதாக உண்மையே. இதில் என் நண்பியின் வாழ்க்கையையும். என்னுடைய வாழ்க்கை கஷ்டத்திலும் நான் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தையும் எழுதுகிறேன்.

தற்காலத்தில் உள்ள பெற்றோர்கள் தன் பிள்ளை O/L அல்லது A/L பரீட்சைகள் தோற்றினால் போதும் மேல் படிப்பு தேவையில்லை என்று சிலர், இன்னும் சிலர் என் குடும்ப கஷ்டத்தால் பிள்ளையை O/L வரையும் தான் படிக்க வைக்க முடிந்தது, இன்னும் சிலர் O/L பரீட்சை தோற்றியதே பெரிய விடயம் இப்படி அப்படியென்று கல்வியை பொடுபோக்கு செய்கின்றார்கள். மேலும் சில பிள்ளைகள் தன் பெற்றோரிடம் கற்க வேண்டிய கல்வியை கூட பணம் கொடுத்து வேறு ஆசிரியர்களிடம் படிக்கின்றார்கள்.

இது அனைத்துமே என்னைப் பொறுத்த வரையில் தவறு என உணர்கிறேன். மேலும் சில பெற்றோர்கள் தன் பிள்ளைகளுக்கு O/L முடிந்த பிறகு அல்லது A/L முடிந்த பிறகு இல்லற வாழ்க்கைக்குள் தள்ளுகிறார்கள். பாவம் சில பிள்ளைகளுக்கு இல்லற வாழ்க்கையில் எவ்வாறு நடக்க வேண்டும், குழந்தையை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்று கூட தெரியவில்லை. இது மட்டுமல்ல வாழ்க்கையில் நாம் சாதிக்க நினைக்கின்ற விடயங்களை சாதித்து மேலும் ஆசைகளையும், கனவுகளையும் நனவாக்கி மேலும் பல விடயங்கள் இருக்கின்றன.

வாழ்க்கையில் யாருக்குக் கஷ்டம் இல்லை எல்லோரினதும் வாழ்க்கை கரடு முரடாகவும், மேடு பள்ளமாகவும் தான் காணப்படுகின்றன. உங்களுக்கு கஷ்டம் அதனால் படிக்க முடியவில்லை என்று சோர்ந்து போய்விடக் கூடாது என்னால் முடியும் என்று விடாமுயற்சியுடன் கற்கையை ஆரம்பித்தால் நிச்சயம் வெல்ல முடியும். பிறந்த ஒவ்வொரு குழந்தையும் ஏதோ ஒன்றுக்காக சாதிக்கப் பிறந்தவர்கள் தான். முதலில் உங்கள் மேல் உங்களுக்கு நம்பிக்கை வர வேண்டும். உங்களுக்கு உங்கள் மேல் நம்பிக்கை இல்லையென்றால் உங்களுடைய ஒவ்வொரு கனவுகளையும் நனவாக்க முடியாது. இதனடிப்படையில் எனது வாழ்க்கை சம்பவத்தை கூறுகிறேன்.

நான் 2020 ஆம் ஆண்டு O/L பரீட்சைக்கு தோற்றினேன், நான் பணக்காரி இல்லை சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ஒரு பெண், எனக்கு நிறைய ஆசைகளும் கனவுகளும் இருக்கின்றன. இறைவனின் கிருபையால் அவை ஒவ்வொன்றும் நிறைவேறுகின்றன.

நான் ஆங்கில டிப்ளோமா கற்கை செய்தேன். செய்தியாளராக கடமை புரிகின்றேன் மேலும் உளவியல்



டிப்ளோமா கற்கைக்காக காத்திருக்கின்றேன் . மற்றும் எனக்கு மலேசியா பல்கலைக்கழகத்தில் சட்டபீடத்தில் படிப்பதற்காக புலமை பரிசில் கிடைத்தது. ஆனால் என்னால் அங்கு சென்று படிக்க போதுமான வசதி இல்லை ஆனால் நான் என்னுடைய விடா முயற்சியை ஒருபோதும் விட மாட்டேன் என்னால் முடிந்த அளவு போராடுவேன். எனது வாழ்க்கையில் நிறைய கஷ்டங்களை நான் பார்த்திருக்கிறேன். அவற்றை போக்க என்னால் முடியும் என நான் நம்புகிறேன். என்னுடைய வாழ்க்கையைப் போல் உங்களது வாழ்க்கையும் இருக்கலாம் ஆனால் ஒரு போதும் விடா முயற்சியை கைவிடாதீர்கள். மாணவச் செல்வங்களே உங்களுடைய பெற்றோர்களுடன் கதைப்பதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது ஆகவே அவ்வுரிமையை சரியாகப் பயன்படுத்துங்கள்.

அடுத்து நம் உறவாகிய பெற்றோர்களே! தயவு செய்து உங்களுடைய பிள்ளைகளின் படிப்பை அரைவாசியில் நிறுத்த வேண்டாம் அப்படி நிறுத்துவதற்கு உங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. நம்முடைய முஸ்லிம் சமுதாயத்தில் பணி செய்கின்ற பெண்கள் மிகக் குறைவு. ஏனென்றால் சேவை ஆற்றுவதற்கு போதுமான கல்வி அறிவு உங்கள் பிள்ளைகளிடம் இல்லை. உங்கள் பிள்ளைகள் யாருக்கும் அடிமைகளாக சேவை செய்யாமல் சுதந்திரமான சேவையை ஆற்ற வாய்ப்பளியுங்கள். திருமணம் முடித்துக் கொடுத்தால் உங்களுடைய கடமை முடியும் என்று எதிர்பார்க்காதீர்கள். அப்போ இவ்வளவு நாட்களாக உங்களுடைய கடமையை நிறைவேற்றவா அவர்களை வளர்த்தீர்கள்.

உங்களுடைய பிள்ளை சமுதாயத்திற்கு ஒரு நட் பிரஜையாக வர வேண்டும் என்று சிந்தியுங்கள் இதனடிப்படையில் எனது இரு நண்பர்களின் வாழ்க்கையை கூறுகிறேன் கதீஜா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) அவள் என்னுடன் கடந்த ஆண்டு O/L பரீட்சைக்கு தோற்றவில்லை இதனை நினைத்து வருந்தினேன் அடுத்த நாள் விசாரித்தேன் என்னவென்றால் கடந்த ஆண்டு (2020) டிசம்பர் மாதம் அவளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு முடிவடைந்தது.

மேலதிக தகவல்களாக அவளின் குடும்பக் கஷ்டமே என்று தெரிய வந்தது. சிந்தியுங்கள் O/L பெறுபேறு கூட தற்போது அவளிடம் இல்லை. இறைவனின் கிருபையில் சந்தோஷமாக வாழ்கிறாள். மற்றொரு நண்பி பாத்திமா (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்னுடன் O/L பரீட்சைக்குத் தோற்றினாள் ஆனால் A/L பரீட்சைக்கு தோற்ற மாட்டாள் ஏனென்றால் அவளின் தந்தை அனுமதி அளிக்கவில்லை. சிந்தியுங்கள் பெற்றோர்களே! சிறு வயதில் திருமணம் ஆவதால் நிறைய பிரச்சினைகள் கணவன் மனைவிக்கு இடையில், இரு குடும்பங்களுக்கு இடையில், மேலும் கடைசியில் விவாகரத்து கூட, பெற்றோர்களே இனியாவது சிந்தித்து செயற்படுங்கள். மாணவர்களே நீங்களும் சிந்தியுங்கள். எனது வாழ்க்கையும், இரு நண்பிகளின் வாழ்க்கையும் படிப்பினையாக அமையும் என நம்புகிறேன் மாணவர்களே! எதிர் காலத்தில் வீர மங்கையாய் துணிந்தெழுங்கள் இப்போதே அதற்குத் தயாராகுங்கள் எனக்கு சட்டத்தரணி ஆகுவது தான் கனவு.

உங்களுக்கு ?
உங்களுடைய கனவுகள் நனவாக பிரார்த்தித்தவளாய் வீர மங்கையர்களில் போற்றும் வீர மங்கையில் ஒருத்தி இவள்

இப்பதிவில் உங்கள் மனம் புண்படும் வகையில் எழுதி இருந்தால் மன்னிக்கவும் உங்களுடைய கனவு நனவாக முயற்சி செய்ய என்னால் முடிந்த சிறு MOTIVATIONAL கவிதை ...

நீ சாதிக்கப் பிறந்தவன்
விழுந்தால் அழாதே... எழுந்திடு ...!
தோற்றால் புலம்பாதே... போராடு ...!
கிண்டலடித்தால் கலங்காதே ... மன்னித்துவிடு... !
தள்ளினால் தளராதே... துள்ளியெழு ...!
நஷ்டப்பட்டால் நடுங்காதே... நிதானமாய் யோசி ...!
ஏமாந்து விட்டால் குனியாதே ... எதிர்த்து நில் ...!
உதாசீனப்படுத்தினால் உளராதே... உயர்ந்து காட்டு ...!
கிடைக்காவிட்டால் குதிக்காதே ... அடைந்து காட்டு ...!
மொத்தத்தில் நீ பலமாவாய் ...!
சித்தத்தில் நீ பக்குவமாவாய் ...!

பேருவளை மண்ணிலிருந்து வீர மங்கையாய் துணிந்தெழுங்கள்...

**பாத்திமா நுஹா நிஸார்**
**பேருவளை**
**ஆங்கில டிப்ளோமா கற்கை நெறி**



# யாழ்.பல்கலையில் புதிய பீடங்கள்! 02


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த வைத்திய அலகு, இராமநாதன் நுண்கலைக் கல்லூரி ஆகிய இரண்டையும் பீடங்களாகத் தரமுயர்த்துவதற்கு கடந்த வருடம் யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் சிபார்சுடன் துணைவேந்தரால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள் கடந்த மாதம் இடம்பெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் படி, இது வரை காலமும் சித்த மருத்து அலகாக இயங்கி வந்த சித்த வைத்தியத் துறையை சித்த வைத்திய பீடமாக மாற்றுவதற்கும், கலைப்பீடத்தின் கீழ் இயங்கி வந்த இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை சேர். பொன் இராமநாதன் நிகழ்த்துகை மற்றும் கட்புல கலைகள் பீடமாக உருவாக்குவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# பொலன்னறுவை சஹ்னாவின் ஓவியத் திறமை ஓர் பார்வை

மொஹமட் இட்ரிஸ் பாத்திமா சஹ்னாவாகிய நான் ஓவியத்துறையில் ஒரு வருட காலமாக பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். எனது ஊர் மற்றும் வசிப்பிடம் பொலன்னறுவை ஆகும்.

நான் பொலன்னறுவை மண்ணுக்கு பெருமை சேர்ப்பதோடு இளம் கலைஞர்களையும் ஊக்குவிப்பதே எனது நோக்கமாகும். இராமநாதன் நுண்கலை பீடத்திற்குத் தெரிவாகி உள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.



துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதமிருமுறை | இதழ் - 11 | 5 ஜூலை 2021



# எங்கே கோளாறு

ஹுமதா ஏ கப்பார்

”நான் டிவோர்ஸ் தாத்தீ”
”ரெண்டு வயசுப் பொடியன் ஒண்டு ஈக்கி”
நா தழு தழுக்க எட்டிப் பார்க்கும் கண்ணீரை மென்று விழுங்கிய படி கூறினாள் அவள்.
முகம் மட்டும் தெரிய அழகாய் ஆடை அணிந்து அந்த பிரத்தியேக வகுப்புக்கு வாரத்தில் மூன்று நாள் செல்லும் அவளைப் பலமுறை நான் கண்டிருக்கிறேன்.அன்றும் அப்படித்தான் எனது வீட்டு வாகனத்தில் செல்லும் போது அவள் நடந்து செல்வதைக் கண்டேன். நானும் குறிப்பிட்ட அவள் வகுப்புப் பக்கம் தான் செல்வதாய்க் கூறவும் வாகனத்தில் ஏறிக் கொண்டாள்.

”உங்கள நா ஒரே காண்ற..
என்ன படிக்ற”
”இங்க்லீஷ்”
”ஆப்டர் ஏயெல் ஆ” சும்மா தான் கேட்டேன்..
இல்ல ”ஆப்டர் டிவோர்ஸ்” எனது முகத்தைப் பார்க்காமலே கூறினாள்.
அகல விரிந்து போனது என் கண்கள்..
”நீங்க மெரீட் ஆ, பாக்க வெளங்கல்ல..நா சின்ன கர்ள் ஒண்டு நெனச்சன் சொறி” என்றேன்.
”யெஸ்,நா இப்ப தான் 22..சின்ன கர்ள் தான்...
விழிகளால் பேசினாள்.20ல மெரி பன்னேன்.. ஒரு புள்ளயோடே டிவோர்ஸ்”என்றாள்.
” ஒங்களுக்கு எத்ன பேர் தாத்தீ”
ரெண்டு பேர் ஈக்ற,மகன் தான் ரெண்டும்”
...
பெருமூச்சோடு சொன்னாள்...
அவர் ”ரூல்ஸ் அண்ட் ரெகியுலேஷ ஆள்..
மோனிங் விடிஞ்சா நைட் தூங்குறது வரயும் அவர் கீறின ரூட் தான்”
ஆனாலும் பொறுத்துப் போய் வாழ்ந்தேன்...ஏண்ட உம்மாட ஊட்டுக்கு கொஞ்சம் தூரத்துல தான் ரெண்ட்டுக்கு இருந்தோம்.. ”சாப்புட வேண்டிய மட்டும் கொண்டு வருவாரு ஆனா... சொல்லி விட்டு என்னைப் பார்த்தாள்...அவளது விழிகளில் சொல்ல முடியா ஏக்கமொன்று தொக்கி நிற்பதாய்...
விழிகளாலே தொடர ” கொண்டு வார கறி எல்லாம் நாம் க்ளீன் பன்னினா அவர் தான் எல்லாம் பங்கு போட்டு பிரிப்பார்..காலைல எடுத்து வெச்சி இத சமை நு சொல்வாரு..நானும் எதுவுமே கேட்க மாட்டேன்.. அவர் சொல்ற படி செய்வேன்... ஒரு கிழமைக்கு பின்னால அவர் வேல உட்டு வந்தா முதல் வேலயா கறி சோறு பால்மா சீனி எல்லாம் திறந்து பாப்பாரு..அதுக்கப்றம் முறச்சிட்டு போவாரு..ரெண்டு மூனு நாளுக்கப்றம் நானே கேட்டேன் என்னா நு.. நா சாப்புடக் கொண்டு வாரதெல்லாம் ஊருக்கு பங்கு வெக்கிறதுக்கில்ல... எங்களுக்கு தான்.. உம்மாக்கும் தங்கச்சிக்குனு ஆக்கி ஊத்தி கொட்டத் தேவல்ல... என்று பேரிடியாய் முழங்கினார்.
”இல்ல நா யாருக்கும் குடுக்கல்ல
யாரும் வரவும் இல்ல..

...இப்படி டெய்லி ஏதாட்ச்சும் வாய்ச் சண்டயாவே இருக்கும். பொறுத்துப் போனேன்.ரிலேட்டிவ்ஸ் எல்லாத்துக்கும் இவர் பத்தி தெரியும்..எல்லாருமே நாங்க நல்லா இருந்தா போதும்டு புரிஞ்சு நடந்துகிட்டாங்க..”
...
மகனுக்கு வன் இயர் இருக்கும்.. நைட் வீட்டுக்கு வந்தாரு..ப்ரிட்ஜ் தொறந்துட்டு பளார்னு அறஞ்சிட்டாரு எனக்கு..எதுவுமே கேக்கல நான்..”மூனு அப்ள்(apple) வெச்சுட்டுப் போனேன் ஒன்னு தான் இருக்கு..ஹா.. தங்கச்சி க்கும் தம்பிக்கும் ஊருக்கும் பிரிச்சுக் குடுத்தீக்கும்... ஒனக்கு சொன்னா வெளங்குறில்லயா...”கோபக் கணல் தெறிக்க என்னை வாட்டி எடுத்தார்..எனக்குப் பேசவே விடவில்லை...
இப்டி டெய்லி பூட் குறையும் போது எனக்குப் பேச விடாமலேயே எனக்கு அடித்தும் ஏசியும் விடுவார்.

”அப்ப நீங்க உம்மா ஹோம்கு குடுக்காட்டி திங்ஸ் குறையுறதா அவர் சொன்னா என்ன ரீஸன்” மெதுவா கேட்டேன்.”மகன் தான்”
ப்ரூட்ஸெல்லாம் அவன் நல்லா சாப்பிடுவான்.. அவனுக்கு லிமிட் எல்லாம் தெரியாதே.. சாப்பிடாம அலைந்து போடுவான்.. சாப்ட்டதுக்கும் கேப்பான்..அப்றம் பீட் பன்றதுனால எனக்கும் பசி ஓவராருக்கும்..எவ்லோ தான் தண்ணி குடிச்சு சமாளிக்க... வார்த்தைகள் உடைந்து ஓவென்று அழுதாள்..

அழுகிப் போன பழங்கள் மறக்கறி எல்லாத்துக்குமா நா யாருக்கோ பங்கு போட்டதா தான் ஏசுவாரு..சொல்லவே கூச்சம் தாத்தீ.... விம்மிப் பேசினாள் அவள்.. அவளின் அந்த ”அவரை” நினைத்து எனக்கு அதிர்ச்சியாக இருந்தது..அவளது கைகளை ஆதரவாகப் பற்றிக் கொண்டேன். என்னை இருக்கிப் பிடித்துக் கொண்டு சொன்னாள்”தாத்தீ,நெக்ஸ்ட் டைம் நா அடி பட்ரப்ப கத்தி கத்தி சொன்னேன்..புள்ள சாப்புட்டான்..
நா சாப்புட்டேன்..அவன் ஒண்டுக்கு ரெண்டு கேக்றாண்டு.. அவர் அத மைண்ட் பண்ணவே இல்ல.. என்ன தான் சந்தேகப் பட்டாரு..
அப்பவு பொறுத்துப் போய் நா சாப்புடாம காலத்தக் கொண்டு போனேன்..ஆனா தினமும் சண்டயும் அடியும் ஏச்சியும் குறையவே இல்ல... என்ன ஏதேதுக்கெல்லாம் சந்தேகப் படத் தொடங்கிட்டாரு.. இப்ப தான் பேச்சு வர்ர புள்ளகிட்ட கூட ஏடாகூடமா கேள்வி கேக்றாரு.. முடியல்ல தாத்தீ டிவோர்ஸ் வாங்கிட்டேன்..

புள்ள வளர வளர அவனுக்கான பசி தாகம் கூடும்..புள்ள விளையாட்றதுக்கும் கேக்கும் சாப்புடவும் கேக்கும்..ஒரு உம்மாவா எனக்கு பிஞ்சு மனசுகிட்ட பொய்யா எல்லாம் இருக்க முடியல்ல..அவன லிமிட் பூட்ஸ்ல ஆழ வெக்கவோ அழ வெக்கவோ முடியல்ல...,,,
உடைந்தழுது கொட்டித் தீர்த்து விட்டுப் போனாள் அவள்.
என்ன மனிதன் அவன்(ர்)...
வேறொன்றும் சொல்லத் தோன்றவில்லை எனக்கு...
......................
சிக்கனமும்,உலோபித்தனமும் வேறு வேறு என்பதை மகனைப் பெற்றெடுத்த ஒவ்வொரு பெற்றோரும் கட்டாயமாக தனது பிள்ளைகளுக்கு சொல்லி வளர்க்க வேண்டும்.
இல்லாவிடின் இவ்வாறான ”டிவோர்ஸ்” களைத் தவிர்க்க முடியாது போயிடும்.
அல்லாஹ் போதுமானவன்.



# விடியல் தூரமில்லை

பாரதி கண்ட புதுமைப்பெண்ணாய்...
பாரினைக்கொஞ்சம்
நிமிர்ந்து பாராய்...
பாவங்கள் இங்கே
பழகிப்போக..
பாவை நெஞ்சம்
புண்ணாய் நோக...

என்னாலும் முடியும் கண்ணே...
உன்னாலும் முடியும் பெண்ணே...

உள்ளத்தில் நல்லவை விதைப்போம்...
இல்லத்தில் நல்லவை
கதைப்போம்....

தீதும் நன்றும் பிறர் தர வாரா...
முதுமொழி சொல்லி
முகவுரை செய்வோம்.

நெஞ்சகம் நின்றும்
வஞ்சகம் கலைப்போம்..
அஞ்சுகம் போலவே..
கொஞ்சியிருப்போம்.

நேர்வழி வந்தபொருள்
என்றும் நிலைக்கும்..
வருமான வழியை
நேர்மையாய் தேடுவோம்

பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும்..
நல்லுள்ளங்களுடன் இணைவோம்..
நம் வாழ்வும் சிறக்கும்.

வஞ்சனை செய்வோர்க்கும்
வந்தனம் செய்வோம்
பசிக்கின்ற வயிற்றுக்கு
பட்சணம் கொடுப்போம்

அயல்வீட்டாரை அன்போடு பார்ப்போம்
உறவினருடன் ஒத்தாசையாய்
இருப்போம்..

என்னாலும் முடியும்
உன்னாலும்
முடியும்..
முயற்சித்துப் பார்ப்போம்
நல்லதொரு பொழுது
நமக்காக விடியும்.

**மக்கொனையூராள்**

# பயணத்தடை

ஏன் இந்தப் பயணத்தடை
ஓ...
காரணம் கொரோனாப் படை


இறையில்லங்களுக்கும் பூட்டு எதற்காய்
வீடுகளிலும் இறைவனை நினைவூட்டு
என்பதற்காய்

நாட்சம்பளத்தில் பிழைப்போரின் நிலை
அது சரித்திரமாக எழுத வேண்டியதொரு
கலை

தொழிலில்லா தொழிலாளர்களின் மனம்
அதை சிந்திக்க வேண்டுமொரு கணம்

அமுல்படுத்தப்பட்டது பயணத்தடை தான்
அமுலிலுள்ளது இப்போ பணத்தடை தானே

**பாத்திமா ஆஷா லாபிர்**
**மாகோனா**




**அபீக் கரியப்பர்**



# வெளிநாடு என்றால் வலிகள் நிறைந்த வாழ்க்கையே

இன்றைய நவீன உலகில் சுதந்திரமாக நடமாடும் பிணைக் கைதிகள் யார் என்றால் தாய் நாட்டை விட்டு வெளிநாட்டிற்கு தொழில் நிமிர்த்தம் சென்றவர்கள் தான்...

இன்றைய கால கட்டத்தில் வெளிநாட்டில் வேலை செய்வதென்பது ஒரு பேஷன் ஆகி விட்டது.வெளிநாட்டில் வேலை செய்தால் நிறைய பணம் சம்பாதிக்கலாம்,வீடு கார் என்பன வாங்கலாம்,நல்ல மரியாதை கிடைக்கும் என்ற எண்ணங்கள் தான் எம்மில் சிலரை வெளிநாட்டில் தக்க வைத்துக்கொண்டிருக்கிறது. வெளிநாட்டில் வேலை செய்வது ஒரு புறம் இருக்கட்டும் ஆனால் அப்படி வேலை செய்பவர்களை சந்தோசமாக இருக்கிறீர்களா என கேட்டுப் பார்த்தால் பெரும் பாலானோரின் பதில் இல்லை என்பதேயாகும்.

இங்கு உள்ளவர்களின் நிலை எப்படி என்றால் தாய், தந்தை குடும்ப உறவுகளின் மரண செய்தி கேட்டு தொலைபேசியில் அழுதவர்கள் ஆயிரமாயிரம் பேர்,தன் மழலையின் சிரிப்பொலியை மனதால் அழுதும்... உதட்டால் சிரித்தும் கேட்டவர்கள் எண்ணிக்கையில் அடங்காதவர்கள்.... தலையணையை தாயின் மடியாக நினைத்தும்.... உறங்கியவர்கள் எத்தனை பேரோ...!!!

இந்த வெளிநாட்டு வாழ்க்கை ஒரு மனிதன் போதைப்பொருளுக்கு அடிமையாவதைப் போன்றே....ஒரு முறை சுவைத்தால் மீண்டும் மீண்டும் சுவைக்கத் தோன்றுவது போல்...இரண்டே வருடம் வெளிநாட்டுக்குச் செல்வோம் என்று ஆரம்பித்து அது ஐந்து வருடம், பத்து வருடங்கள் என நீடித்தே செல்கிறது.காலம் எனும் சக்கரத்தில் சிக்கித் தவித்து இந்த வெளிநாட்டில் இருக்கும் உறவுகள் ஏராளம்.,

தனது இருபது வயதினில் வெளிநாடு வந்து தன் இளமை முழுவதையும் இந்த வெளிநாட்டில் தொலைத்து விட்டு முதுமைக் காலம் வரையும் வெளிநாட்டில் உழைத்து ஓடாய்த் தேயும் உறவுகளே அதிகமதிகம். இதில் சூழ்நிலை காரணமாக வெளிநாட்டில் இருப்பவர்கள் உண்மையில் என்னைப் பொறுத்தவரை பரிதாபத்திற்கு உரியவர்கள். அவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக இங்கு வந்து விடுகிறார்கள், ஆனால் ஊரில் பாதி மனதும் இங்கு மீதி மனதுமாக நடைப்பிணமாய் வாழ்கிறார்கள்.இது மட்டுமல்லாமல் பல வருடங்கள் கடந்தவுடன் இளமை தொலைந்தவுடன் இனி ஊரில்/நாட்டில் என்ன செய்வது என்று கூடத் தெரியாமல் இந்த வெளிநாட்டிலேயே தனது வாழ்நாளைத் தொலைக்கும் துர்ப்பாக்கிய சாலிகளும் இவர்களே...!
இங்கு வந்தால் தாய் நாடு மறக்கப்படுகிறது அதற்குள் பத்து பதினைந்து வருடங்கள் ஓடி மறைகிறது.இளமை தொலைந்தவுடன் சக்தி குறைந்தவுடன் நாட்டுக்குச் சென்று என்ன பலன் என்று கேட்பார்கள் சிலர்...அப்படி கேட்பவர்களுக்கு இவர்களின் பதில் நாம் இங்கு உழைத்தால் அங்கு எம் குடும்பம் சந்தோசமாக இருக்கும் என்று.

ஆனால் இங்கு இருப்பவர்களின் நிலை யாருக்கும் புரிவதில்லை பசியுடனும், ஒரு வேளை உணவுடன் ஒரு நாளைக் கழித்தும், ஓரிரு மணித்தியாலம் தூங்கி மீதி மணி நேரத்தை வேலை செய்தும்... பகுதி நேர வேலை செய்தும் உழைக்கிறார்கள். ஒரு சிலர் இதற்கு விதி விலக்கானவர்கள் தொடர்ந்து ஓரிரு நாட்கள் தூக்கம் இல்லாமலும் வேலை செய்வார்கள்.இது மட்டுமல்லாமல் சுடு வெயில் என்றும்,கடும் குளிர் என்றும் பாராமலும் உழைக்கும் வெளிநாட்டு தொழிலாளர்களும் ஓர் கடவுள் தான்.

இவர்கள் சிந்தும் வியர்வைதான் இவர்களின் குடும்ப உறவுகள் பூசும் நறுமணம். விடுமுறை இல்லாமல் உழைக்கும் இந்த வெளிநாட்டு தொழிலாளர்களின் துயர் எப்போது நீங்கும்? தன்னுடைய ஒரு வேளை உணவைக் குறைத்தால் என் குழந்தை பாடப்புத்தகம் வாங்கும் எனக் கூறும் தந்தையும்,நான் புதுத் துணி வாங்கும் பணத்தை நாட்டிற்கு அனுப்பினால் என் தாய்க்கு மருந்து வாங்கலாம் எனக் கூறும் பிள்ளைகளின் மனக் கவலைகளும் நிறைந்தது தான் இந்த வெளிநாடு வாழ் தொழிலாளர்களின் நிலை...

உறவுகள் இருந்தும் நாங்களும் அநாதையாய் இந்த வெளிநாட்டில்... எம் உறவுகளுக்காக உதிரத்தை வியர்வையாக்கி, கனவினை நனவாக்க உழைக்கிறோம். நம்ம வாழ்க்கை தான் இப்படி வெளிநாட்டில் போய் விட்டது நம் அடுத்த தலை முறையாவது இந்த வெளிநாட்டு போதையில் சிக்கித் தவிக்காமல் இருக்க வேண்டும். வெளிநாட்டு மோகத்தை மறந்து தத் தம் நாட்டில் தாய் தந்தை, குடும்பம் என்று சந்தோசமாக நம் வாழ்வைக் கழிப்போம்.

**ஐ.முஹம்மட் றிப்கி**
**சாய்ந்தமருது**



# ஏக்கம் நிறைந்த சுடுகாடும் முதலைக் கண்ணீரில் சாதிக்காடும்...

உலகில் இயற்கை தோன்றி அழகுற காட்சிதந்து அதன் பின் ஒவ்வொன்றாக உருவானது. இதில் மனிதன் எனும் மிகச்சிறந்த உயிரானது உருவானது. இயற்கையே வியந்து பார்க்கும் அளவில் உயர்ந்து இருந்த மனிதனின் வாழ்வில்.....

எவராயினும் பிறந்தால் இறப்பது உறுதி... இடைப்பட்ட காலத்தில் அவன் செய்யும் நன்மை, தீமை பொறுத்து அவனுடைய அனைத்து தேவைகளும் இல்லாமலும்,இன்பம் குறையாமலும் செல்கிறது....

இத்தருணத்தில் இயற்கை படைத்த மனிதன் சிந்தையில் சிக்கிக்கொண்டு மிக்க கொடூரமாக உருவெடுத்தது சாதி எனும் வெற்று தீ....

அனைத்து வேளைகளிலும் நிரம்பி வழிந்த சுடுகாடு கேட்பாரற்று சுனங்கி கிடக்கிறது. ஆங்காங்கே விழுந்த பிணங்கள் காரணத்தின் அடிப்படையில் கொரானா என்பதால் காடுவரை அல்ல,வீடுவரை கூட வர இயலாது அனாதை சூழலில் அடக்கம் செய்யப்பட்டது..

எங்கே சென்றதடா சாதி..

இப்போது எரிக்கச் சொல்லுங்கள் தலையில் பிறந்தவன் முதல் காலில் பிறந்தவன் வரை தனித்தனியாக கட்டிவைத்த காலி கட்டிடமாக தோற்றமளிக்கும் ஆளில்லா சுடிகாட்டு கட்டிடங்களை....

ஆத்தோரங்களில் அந்தந்த சாதி பிரியர்களின் வெள்ளைதுணி போத்திய பிணங்கள் யாரும் அறியாத பத்தடி மின்சார அடுப்பில் திணிக்கப்பட்டு வேகாது வெந்து சாம்பலானது...

அப்போதும் மாறாத சாதிப்பிணங்கள் பிணக்கிடங்கிலும் தம்பட்டம் அடித்து முந்திக்கொண்டு இருக்கிறது.... எங்கு தான் தீருமோ சாதி நோய்கள்,கொரானா கொஞ்சம் கொஞ்சமாக மக்களை பஞ்சத்தில் ஆட்படுத்தி தானாக இறக்கச் செய்து பெயரை மட்டும் வாங்கிச் செல்கிறது....

கொரானா என்று கொன்றது போதுமடா...
மக்களை சுயமாக சிந்திக்க வைத்து பிச்சையாவது எடுத்து உண்ண செய்யுங்களடா...

கொரானா ஆள்கிறதோ இல்லையோ..
சாதி எனும் நோய் ஆள்கிறது...

யாருமே இல்லாத தனிமையின் வருத்தத்தில் ஆங்காங்கே எரியாத சுடுகாடுகள் யாருமில்லா கவலையில் எட்டிப்பார்த்து ஏக்கத்தில் காத்திருக்கிறது இன்றுவரை...

காலம் விரைவில் விளக்கம் கூறும் மாறாத..

ஏக்கம் நிறைந்த சுடுகாடும்-முதலைக்கண்ணீரில் சாதிக்காடும்...

**கார்கவி**
**நாகப்பட்டினம்**



# தாழ்வு மனப்பாங்கு

சிங்கம் இருக்கும் காட்டில் மான்கள் வாழ்வது எவ்வளவு கடினமோ. ஒரு மனிதனின் மனதில் தாழ்வு மனப்பாங்கு குடி கொண்டால் அந்த மனிதன் வாழ்க்கையில் முன்னேறுவது சாதிப்பது கஷ்டம்.

எனவே தாழ்வு மனப்பாங்கு எனும் இருளை முதலில் அகற்ற வேண்டும். நீங்கள் அழகு என்பதை முதலில் நீங்கள் நம்புங்கள். நிறத்திற்கும் அழகிற்கும் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். யாரும் சொன்னாலும் ரசித்தாலும் தான்.

நான் அழகு என்று நினைப்பதை நிறுத்துங்கள்.
உங்களை நீங்களே ரசியுங்கள்.. எந்த மொழி சரளமாக பேச முடியவில்லை என்றாலும் கவலை கொள்ளாதீர்கள். உங்களை நக்கல் செய்பவரிடம் துணிச்சலாய் எதிர்த்துத் சொல்லுங்கள். இங்கு பலருக்கு அவரவர் தாய் மொழியையே சரியாகப் பேசத் தெரியாதென்று..

உங்களால் எது முடியாது... உங்களுக்கு எது தெரியவில்லை என்று யாரேனும் சொன்னாலும், அதை விரைவில் கற்றுக் கொண்டு முடித்துக் காட்ட வெறித் தனமாய் முயற்சி செய்யுங்கள்..

என் வாழ்க்கை சோகம் நிறைந்தது என்று நினைக்காதீர்கள்... எல்லாம் நிறைவாய் இருக்கும் வாழ்க்கை இங்கு யாருக்குமே அமைவதில்லை... என்பதே உண்மை.

உங்களுக்கு எதுவும் தெரியாது....
எதிரில் நிற்பவருக்கு எல்லாமே தெரியும் என்று ஒரு போதும் நினைக்காதீர்கள்... இந்த எண்ணம் இருந்தால் நீங்கள் சொல்ல வந்ததை சரியாகத் தடுமாற்றம் இன்றி சொல்லி முடிக்க முடியாது..

கேள்வி கேட்பதற்கும் உங்களை முன் நிறுத்துவதற்கும் மொழி ப் புலமை அவசியம் என்று நினைக்காதீர்கள்.... உலகில் சரியாக சிந்திக்க வைத்த கேள்விகளைக் கேட்ட நிறையப் பேர் மொழிப்புலமை இல்லாமல் தங்களுக்கு தெரிந்த வார்த்தைகளைக் கொண்டு தங்கள் கேள்விகளை சரியாகப் புரியவைத்தவர்கள்....

அழும் போது தனியாக அழுங்கள்... நீங்கள் அழைத்தாலும் சேர்ந்து அழ இங்கு யாரும் வரப்போவதில்லை என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்...!!! கண்ணீரில் துக்கத்தை கரைத்து தூர எறிந்து விட்டு முன் செல்லுங்கள்...

உங்கள் அன்பு எந்த இடத்தில் நிராகரிப்பட்டாலும் இழப்பு உங்களுக்கில்லை, நிராகரித்தவருக்கே என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

தாழ்வு மனப்பான்மை எனும் இருள் அகற்றுவோம்

**தௌபீக் முஹம்மது நவீத்**



# மனிதனென்பவன் யாரெனில்...

தான் நிரம்பிக்கொள்வதற்கும்
தான் மகிழ்ந்திருப்பதற்கும்

சக மனிதனிடம் போற்றுதல்களை
சக மனிதனிடம் பாராட்டுக்ககளை
சக மனிதனின் திருப்திகளை
சக மனிதனின் ஒப்புதல்களை
சக மனிதனிடம் கண்ணியங்களை
சக மனிதனிடம் மதிப்புக்களை
சக மனிதனிடம் விருப்பங்களை
சக மனிதனின் பற்றுதல்களை
சக மனிதனிடம் கருணைகளை
சக மனிதனிடம் அன்பினை
சக மனிதனின் அக்கறைகளை
ஆகக் குறைந்தது ஒரு புன்னகையேனும்
எதிர்பார்த்து நிற்கின்றான்
ஆனாலும் மனிதன் முழுமையாக
நிரம்பிக்கொள்வதில்லை

ஏனெனில்
தன் சுயங்களால்
தன் திருப்திகளால்
தன் விருப்பங்களால்
தன் தேர்வுகளால்
தன்னைத்தான்
நிரப்பினால்தானே

தன்னை தானே நேசித்தாலொழிய
தன்னைத்தானே பாராட்டிக்கொண்டாலே தவிர
ஒருபோதும்
யாருமே தன்னளவில் முழுமையாக நிரம்பிக்கொள்ள
முடியாது

இதுதான் மனிதனென்பது
யதார்த்தமானது
இயல்பானது

**மயிலிறகு**
**சிபானா அஸீம்**
**மருதமுனை**



# கற்பது நினைவில் இருக்க....

பரீட்சை எனும் போது பலருக்கு பீதி, தயக்கம் உண்டாகிறது. ஏன் இந்த பயம் உண்டாகிறது? பரீட்சையில் இலகுவாக சித்தி அடைய பல வழிமுறைகள் உண்டு. பரீட்சை என்பது ஆராய்ச்சி,சோதனை, பரிசோதனை என பொருள்படும்.

பொதுவாக பரீட்சைகள் என்றாலே பலருக்கு பிடிக்காது. உண்மையில் கற்ற விடயங்களை மதிப்பிடும் முறையே பரீட்சை ஆகும். பரீட்சை பீதி வராமலிருக்க கற்பவற்றை உணர்ந்து ஆழமாக கற்க வேண்டும்.

இலகுவாக கற்க வழிகள்

1.கல்வியை நேசித்து ஆர்வத்தோடு கற்க வேண்டும். ஆர்வத்தின் மூலமே சிறப்பான தேர்ச்சிகளை அடையலாம்

2.கற்பதற்கான சூழலை உருவாக்கிக்கொள்ள வேண்டும். வீடாக இருந்தால் தான் கற்பதற்கு ஏற்றாற் போல் எவ்வித இடையூறும் இல்லாத ஒரு இடமாக இருக்க வேண்டும்.

3.கற்பவற்றை மீட்டி மீட்டி கற்க வேண்டும். முதல்நாள் கற்றவற்றை ஒருதரம் மீட்டி விட்டு புதிய தலைப்பை (chapter) கற்க வேண்டும்.

4.மனதால் மீட்டல் .மனனம் செய்தவற்றை சொல்லிப்பார்த்தல். தன்னை தானே மதிப்பிடல்.தானே கடந்தகால பரீட்சை வினாத்தாள்களை செய்து பார்த்தல்.

5 நேர சூசி தயாரித்தல். கற்கும் பாடங்களை சரி சரிமாக பிரித்து நேர சூசியை தயாரித்தல்.

6.கற்கும் போது எவ்வித சலிப்புமின்றி வேறு சிந்தனைகளின்றி கற்க வேண்டும்.

7.கணிதம் போன்ற பாடங்களில் இயலுமானவரை பயிற்சிகள் செய்தல்.

8.கற்கும் போது உரத்து வாசித்தலே சிறந்தது. உரத்து வாசிப்பதன் மூலம் செவிமடுத்தலால் மூளை வாசிப்பவற்றை பதிந்து கொள்ளும்.

9. கற்கும் போது எழுதி எழுதி படித்தல். இதனால் இலகுவாக மனனம் செய்யலாம்.

10.விளங்கி படித்தல்.உதாரணங்களை அறிந்து படித்தல்.

11. மனதில் , தன்னம்பிக்கையோடு கற்றல்.

12.கற்றவற்றை பிறருக்கு கற்பித்தல்.

இவ்வழிமுறைகளின் மூலம் இலகுவாக கற்கலாம். கற்பது மறக்காமல் நினைவில் இருக்கும் வரை பரீட்சை என்பது வெறும் மதிப்பீடாகவே இருக்கும். முறையாகக் கற்காமல் இருப்பது பரீட்சை பீதி உண்டாகக் காரணமாகும்.

இலகுவாக கற்று இலகுவாக சித்தி அடைய வாழ்த்துகள்!

**ஆர்.எப் மதீரா**
**தென்கிழக்கு பல்கலைகழகம் –ஒலுவில்**



# நேசம்

**“வினாடிகளை விண்மீனாய் ஜொலிக்கச் செய்திடும், பொழுதுகளை பொக்கிஷமாய் மாற்றிடும் பேரன்பே உலகில் சிறந்ததெனலாம்.”**

நெகிழ்ச்சியான உள்ளங்களை ஆழ்ந்து கொண்டிருக்கும் அழகிய மொழியே நேசம். கணத்த பொழுதுகளையும் கருணை கொண்டு மாற்றலாம். தோல்வியுற்ற உள்ளங்களையும் நேசத்தால் வெல்லச் செய்யலாம்.

சிலர் தனது நலனுக்காய் அவர்களது நாட்கழிப்புக்காய் நேசம் எனும் வார்த்தையையே வெறுக்கச் செய்து விடுகின்றனர்.

எனினும், பொய் நேசம் ஒரு போதும் உண்மை அன்பை அழித்துவிடாது என்றே கூற வேண்டும்.

அன்பின் விழுதுகளால் உறவுகள் எனும் ஆலமரம் என்றைக்கும் நிலைத்திருக்க வேண்டுமென்பதே ஒவ்வருவருடைய அவாவும். பொய்யான வாக்குறுதிகள் சில போது ஒருவர் மேல் கொண்ட நேசத்தின் நிழலையே சிதறடித்து விடும்.

விட்டுக் கொடுப்புகள் என்பது அந் நேசத்தையே ஆழமாய் சுவாசிக்கச் செய்திடும். ஆயினும் விட்டுக் கொடுப்பு என்பது ஒருவருடைய இயலாமை என்று பொருளாகாது. அது அவர் கொண்ட நேசத்தின் வெளிப்பாடே.

உலகை ஆளும் நேசம் உயர்வையே தரும். எனவே, எதனை கொண்டு நேசத்தை சுவாசிக்கலாமோ அதனை தொடர்ந்து செய்யுங்கள். கல்லும் கரையும் நேச வார்த்தையின் மொழியால்.

நேசத்தை சுவாசித்து எல்லோர் மனதையும் நெகிழவைப்போம். வாழ்க்கை வரமாகும்.

**பின்த் சமீர் ரிபாய்**
**குருணாகல்**



# விதையால் விதி செய்

விதையால் விளைந்த காகிதங்களில் என் பேனை ரசம்
சற்று நேரம் இழையோடும்
உற்றுநோக்கி உணர்ந்திரு விதி செய்கிறேன்

கவிதைக்குள் கதை சொல்கிறேன்
நான் நீயாக மாறிடு
நினைவுகள் நிழற்படம் ஆகட்டும்

உடம்பால சிறுத்தவளே
பெரும்பாலும் கருத்தவளே
தூக்கி எறிந்தாலும் மொழச்சி எழுபவளே
பக்குவமாய் வளர்த்திடுவாள்– உயிர் வளர்க்க உயிர்
மூச்சும் தந்திடுவாள் – (அது வாங்கி வந்த விதியாச்சே)
பிஞ்சிலையும் அஞ்சிலையும் அட ஆடி ஒடுங்கையிலும்
ஒரே பேருதா ஒரே குணந்தா

வளமான செம்மண்ணோ, செங்காத்து புழுதியோ,
இது என்ன பிரமாதம் அடிபடுவம்னு தெரிஞ்சே ரயில்
பாதையிலு கிடுகிடுன்னு மொளச்சு நின்னு எது வந்தாலும்
பொழச்சு நின்னு பச்ச சிரிப்பு சிரித்திடுவா!

காலங்கள் நதி நீர் செல்லும் ஓடமாய் விதிவழி நகர ...
மழையும், நிழலும் –நீரும், மருந்தும் அவளுக்குள்
அடக்கம்

பக்கம் நிற்கும் சொந்தமெல்லாம் பக்குவமா நடத்தி
வந்தா...
அவளோட ஆற்றலெல்லா..
உயிர் வாழும் வரைக்கு சுவாசமா பகிர்ந்து நிற்பா
சந்ததியும் பெருக்கிவப்பா

இது அவள் உறக்கத்தில் காடே இருக்கிறது என்று பொருள்

நானாக மாறி நிற்கும் அவனோ அவளோ! என்னை
கொஞ்சம் நிலத்தில்தான் இறக்கிவிடுங்களேன் ஒன்று
போராடி காடு செய்கிறேன் இல்லையேல் உரமாய்
போகிறேன்...

ஒன்று மட்டும் நினைவில் கொள்க இப்போது விதியாற்றப்
போவது நீங்கள்!
நான் என்னுள் காடு கொண்ட விதை எனினும்– விதை
போல பெண் எனினும் எங்களை தூக்கி சுமக்காதீர்
விதி செய்ய வழி தருக..

**பாலசுப்ரமணியம் ருக்சனா**
**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்**



# அன்பான வாழ்க்கைத் துணை

உங்கள் திருமண உறவில் உங்களுக்கு எந்தவித மதிப்பும் பெறுமானமும் இல்லை என்று நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா?

ஆம் என்றால் உங்கள் மதிப்பை உங்களுடைய துணை இன்னும் உணரவில்லை அல்லது நீங்கள் உணர்த்தவில்லை என்பது தான் அதன் பொருள். உறவுகளில் உங்களுக்கென எந்த மதிப்பும் இல்லை என்று உணரும் போது அது இதயத்தை வலிக்க வைத்து மனதை வெகுவாக உடைத்தும் விடுகிறது.

உறவுகளின் ஆரோக்கியம் என்பது பரஸ்பர பங்கேற்பைப் பற்றியது. ஒருவரின் முடிவு மட்டும் மதிக்கப்பட்டு மற்றவரின் கருத்து புறக்கணிக்கப்படும் போது, அது அந்த நபரை மிகவும் தகுதியற்றவராக்குகிறது. இது மீண்டும் மீண்டும் நிகழும்போது, அதுவே உறவுகளின் விரிசிலுக்கு காரணமாகி விடுகிறது. இந்த வலியைத் தவிர்க்க, சிலர் மௌனத்தைத் தேர்ந்தெடுத்து தங்கள் எண்ணங்களைத் தங்களுக்குள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் அந்த உறவின் ஒரு அங்கமாக மாறுவதைத் தடுத்து நிறுத்துகிறார்கள், மெதுவாக அதில் ஆர்வத்தை இழக்கிறார்கள். இது தான் பெரும்பாலும் விவாகரத்தை நோக்கி நகர்த்துகிறது.

உங்கள் வாழ்க்கைத் துணை அல்லது அன்புக்குரியவர்கள் என்போர் நீங்கள் தேடிய மிகச்சிறந்த நபர்கள். அவர்களை குறைத்து மதிப்பிடாதீர்கள், உங்கள் ஈகோவை ஒதுக்கி வைத்துவிட்டு, அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்த அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள். உங்கள் அன்புக்குரியவர்கள் உங்கள் நலன் விரும்பிகள், அவர்களை விட சிறந்த உறவொன்றை நீங்கள் பெற்றுக் கொள்ளவே முடியாது. காலம் அதை உணர்த்தும்.

**சப்னா நஸீர்**
**கெலிஓயா**



# மரணம் முற்றுப்புள்ளியல்ல

காற்றும் காற்றும் மோதும்
என் மூச்சு நரம்புகள் வீங்கும்
ஓடும் உதிரம் தேங்கும்
துடிக்கும் இதயம் ஓயும்
கண்ணீர்த் துளிகள் வீழும்
இரண்டு கண்களும் மூடும்.....

அதிர்ந்த மனங்கள் சாயும்
சந்தன மணமும் வீசும்...
தங்க மனங்கள் ஏங்கும்
தூக்கும் போதும் கதறும்

காற்றே இல்லா அறையில்
கருமை இருட்டில் வாடும்
மண்ணறை வாழ்க்கை நீளும்
மண்ணின் வாசம் வீசும்
மனித வாசனை நீங்கும்
மாயமாய் மாயும்
காயம்...
அசரீரியாய் ஒலித்திடும்
குரலும்
மரணம் முற்றுப் புள்ளியல்ல என்றே
சொல்லும்....

**இம்தியாஸ் சாஹுல்**



முஹம்மட் ஹாசில் (ஊடகவியலாளர்)

# மாசடைந்து வரும் இலங்கைத்தீவின் கடல்வளமும் நமது மௌனங்களும்...!

உலகில், மனித குலத்துக்கு மட்டுமன்றி அனைத்து ஜீவராசிகளுக்கும், சமுத்திரங்களின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. அந்த வகையில் நாம், கடற்கரையையும் கடல்சார் வளங்களையும் பராமரிப்பதும் பாதுகாப்பதும், மிக முக்கியமானது.

நாளாபுறமும் கடலால் சூழப்பட்ட இலங்கைத்தீவு, அழகிய கடற்கரைப் பிரதேசங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள போதிலும், அதிகரித்துச் செல்லும் கடற்கரைச் சூழல் மாசடைதல் காரணமாக, அதன் எழில் படிப்படியாக மறைந்து செல்கிறது. உலகளாவிய ரீதியில், ஒவ்வொரு வருடமும், கடலில் மாத்திரம் 60 சதவீதமான பிளாஸ்டிக் பொருட்களுடன் கூடிய 1,000 தொன்னுக்கும் அதிகமான குப்பைகள் அகற்றப்படுகின்றன.

கடற்கரைதான், மக்களுக்கான மிகப்பெரிய பொழுதுபோக்காகும். சமுத்திரப் பிராந்தியச் சட்டப்படி, இலங்கையைச் சுற்றி 1,700 கிலோமீற்றர் பரப்பு, கரையோர மாசடைதல் தவிர்ப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், அன்மைக்காலமாக கடற்கரையும் கடல் வளமும், தீவிரமாக மாசடைந்து வருகிறது.

ஆனால், இன்னும் கடலில் மாசு ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி, போதியளவிலான விழிப்புணர்வு, மக்களிடம் இல்லை என்பதே உண்மையானது. அதேபோல், அதற்கெதிரான சட்டங்களும் இன்னும் வலுவடையவில்லை. குறிப்பாக, குப்பைகளைக் கடற்கரையோரங்களில் போடுவதால், கடல் வளம் பாதிக்கப்படும் என்பது, எம்மிடையே பலருக்கும் தெரியாதா, இல்லையெனில் தெரிந்தும் தெரியாதது போல் நடக்கிறோமா என்பது, புதிரான ஒன்றாகவே இருக்கிறது. இவ்வாறு இவ்விடயத்தின் ஆபத்தை அறிந்தவர்களின் உதாசீனத்துக்கு, சட்டத்தில் உள்ள குறைபாடே காரணமாகும்.

கடற்கரையை அண்மித்த பகுதிகளில் உள்ள தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவுகள் காரணமாகவும் பிற நிர்மாண நடவடிக்கைகள் காரணமாகவும், கடற்கரை மாசடைகிறது. மேலும், கடற்கரைக்கு வரும் உள்ளூர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், தமது குப்பைகளை ஆங்காங்கே வீசிச்செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு வீசப்படும் குப்பைகள், கடலினுள் சேரும் போது, கடல் வள உயிரினங்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன.

தற்போது எமது சமுத்திரங்களில் சேர்க்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளைத் தவிர்த்து, மூன்றில் இரண்டு நீர் வளத்தைக் கொண்ட இந்த பூமியிலில் இந்தக் கழிவுகள் மூலம் உயிரினங்களுக்கு ஏற்படுகின்ற தீமைகளைக் கணக்கெடுப்பதில் மட்டும் சென்று கொண்டிருப்பது அர்த்தமற்றதாகிவிடும். அத்துடன், கரையோரப் பாதிப்புப் பற்றிச் சிந்திக்கும் போது, கரையோரங்களின் ஊடாக மனித உயிர்கள் எதிர்கொண்டுள்ள அபாயங்களிலிருந்து பாதுகாப்பான முறையில் நடந்து கொள்வது பற்றியும் அதிகம் கவனமெடுக்க வேண்டும்.

கடல் சம்பந்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கைகளின் படி (The United Nations Convention on the Law of the Sea) சமுத்திரத்தில், குறிப்பிட்ட சில பகுதிகள் எமது நாட்டுக்குச் சொந்தமானவையாகும். இலங்கை, 1982ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோதிலும், 1997 ஜூலை 19இலேயே, இது அமுலுக்கு வந்தது.

இதன்படி எமது நாட்டின் சமுத்திர பிரதேசமானது, பல சமுத்திர வலயங்களாக உருவாக்கப்பட்டுள்ளது. தரையில் இருந்து கடற்பரப்பை நோக்கி 12 கடல் மைல் தூரத்துக்கான கடலோர வலயம் தரைசார்ந்த கடல்வளம் என அழைக்கப்படுகின்றது. இப்பிரதேசத்தின் வளி, கடல் நீர்பரப்பு, கடலின் அடிப்பக்கம் ஆகிய அனைத்தும், எமது நாட்டுக்கே சொந்தமானது. இதன் விஸ்தீரணம் அண்ணளவாக 21,700 சதுர கிலோமீற்றர்களாகும்.

தரைசார்ந்த கடல் எல்லையில் இருந்து 12 கடல்மைல் ஆரம்பப் பிரதேசம், "கடற்புல ஆட்பகுதி" என அழைக்கப்படுகின்றது. இப்பிரதேசத்தில் நீர் வளம் மாத்திரம் காணப்படுவதுடன், இதன் கடல் அடிப்பக்கம் வரையுள்ள பிரதேசம், எமது நாட்டுக்கு உரித்தானது. இவற்றைக் கண்காணித்துப் பராமரித்தல், ஆய்வுகளை மேற்கொள்ளுதல் என்பவற்றுடன் உயிரியல், பௌதீகவியல் விவசாயம் என்பனவும், எமது நாட்டுக்கே முற்றிலும் உரித்துடையது.

இதற்கமைய, எமது நாட்டுக்குரிய அனைத்து சமுத்திர வலயங்களும் சமுத்திர வலய சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பிரதேசத்தில் மேற்கொள்ளவேண்டிய மாசுத் தவிர்ப்பு நடவடிக்கைகள் அனைத்தும், எமது நாட்டையே சாரும். இவ்வாறானதொரு நிலையில், மாசுபட்ட கடற்கரையில், இலங்கை 5ஆவது இடத்தில் இருப்பது சர்வதேசத்தின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தும் ஒன்றாக கருதநேரிடும். அது மாத்திரம் அல்லாது, உள்நாட்டில் அதன் தாக்கம், எவ்வாறு மக்களைச் சென்றடையும் என்பது அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை நான்கு பக்கங்களிலும் கடலால் சூழ்ந்த நாடாகும். எனவே நாம், கடற்கரையை பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் கடல் வளம் பாதிப்படையாமல், வளம் பெறும். எனவே, அதைப் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்பு, எம் ஒவ்வொருவருடைய மனதிலும் எழ வேண்டும். கடற்பகுதியை அண்டிய பகுதிகளில் தொழிற்சாலை, பொழுதுபோக்கு நிலையங்கள், நவீன துறைமுகம் அமைப்பது வரை, அரசாங்கம் சார்பிலானாலும் சரி,

தனியார்துறைகளானாலும் சரி, பல விடயங்களில் அக்கறை இன்றிச் செயற்படுவதைக் காணமுடிகிறது.

மனிதனால் ஏதேனும் பொருட்கள் அல்லது சக்தி வளங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கடற்கரையில் செலுத்துவதன் காரணமாக, கடல் வாழ் உயிரினங்கள், மனித சுகாதாரம் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன், கடல் சார்ந்த மீன்பிடி நடவடிக்கைகள் பாதிப்படையும். மேலும், கடல் நீரின் தரத்தை அழிவடையச் செய்யும். அத்துடன், சமுத்திரத்துடன் தொடர்புபட்ட அனைத்து சுற்றுலாத்துறை நடவடிக்கைகளும் வீழ்ச்சியடையும். இதனைக் கவனத்திற்கொண்டே, சர்வதேச கடல் சார் வலயங்களைத் தூய்மைப்படுத்துவதற்கான தினமொன்று பிரகடனப்படுத்தப்பட்டு அனுஷ்டிக்கப்படுகின்றது. இத்தினத்தில் கடலின் பெறுமதியை, அனைத்து மக்களும் உணர்ந்து செயற்படுவது முக்கியமாகும்.

ஆறுகள், நீரோடைகளில் நாங்கள் வருடாந்தம் 1.59 மெற்றிக்தொன் பிளாஸ்டிக்கையும் பொலித்தீனையும் வீசுகின்றோம். அந்த ஆறுகள், கடலில் சென்று கலக்கின்றன. இவையும், கடற்கரை மாசடைவதற்கு முக்கியமான காரணிகளாக அமைந்துள்ளன. 1975ஆம் ஆண்டை விடவும், இலங்கையில் பிளாஸ்டிக் பயன்பாடு, தற்போது அதிகரித்துள்ளது. பிளாஸ்டிக்கினதும் பொலித்தீனதும் பாவனை, தேவையற்ற முறையில் முன்னெடுக்கப்பட்டமை, பயன்படுத்தப்பட்டமை, முறையற்ற ரீதியில் அகற்றியமை உள்ளிட்ட காரணங்களால், சுற்றுச்சூழலுக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

தாய்லாந்து, இந்தியா, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளின் கடல்களில் ஏற்படுகின்ற நீரோட்டங்கள் மூலமாகவும், இவ்வாறான கழிவுகள் தொலைதூரத்திலிருந்து, இலங்கை கடற்கரைகளுக்கு இழுத்து வரப்படுகின்றன என்று கூறப்படுகிறது. பல்வேறான நிறுவனங்கள், கழிவுகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளாது, அவற்றைக் கடலுக்குள் கலக்கச் செய்துவிடுகின்றன. ஆகையால், பிளாஸ்டிக் கழிவுகள், பொலித்தீன் உள்ளிட்ட வகைகள் தொடர்பில், நிறுவனங்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்தேச்சியாக இடம்பெறும் கடற்கரை மாசடைதலைத் தடுக்க, அரசாங்கம் பல்வேறு வேலைத்திட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வருகின்றது. அதன் ஒரு கட்டமாக இலங்கையில், ஒவ்வொரு வருடமும் செப்டெம்பர் மாதம் மூன்றாவது சனிக்கிழமையில், சர்வதேச கடற்கரை தூய்மைதின தேசிய நிகழ்வு அனுஷ்டிக்கப்படுகிறது. கடற்கரை தூய்மை தினம், உலகெங்கிலும் உள்ள கடற்கரைப் பிரதேசங்கள் மற்றும் கரையோரத்தை அண்மித்த பிரதேசங்களைச் சுத்திகரித்துப் பேணுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டதாகும். இது உலகில் முன்னெடுக்கப்படும் ஒரு மிகப்பெரும் தன்னார்வ நிகழ்வாகக் கருதப்படுவதோடு, 26 வருடங்களுக்கும் மேலாக இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது.

கடல் மாசுறல் தடுப்பு அதிகாரசபை, பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், சாதாரண பொது மக்களிடையே இது பற்றிய ஆயத்தம் மற்றும் அறிவை விருத்தி செய்வதில் அக்கறைக் காட்டிவருகிறது. அதாவது, பாடசாலை சார்ந்த கடல் சுற்றாடல் குழுக்கள், விடய அறிவை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள், கண்காட்சி அலகுகளை விருத்தி செய்தல், வானொலி நிகழ்ச்சித் திட்டங்கள், விடய அறிவை விருத்தி செய்வதற்கான பொருட்களை பங்கிடல் ஆகிய பிரிவுகளில் அறிவூட்டலை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு



வருகின்றன.

இதற்கு மேலதிகமாக, இலங்கைக் கடற்பரப்பில் எதிர்காலத்தில் சட்டமொன்று இயற்றப்பட வேண்டும். அதன்மூலம் வெளியிடப்படும் கடல் எல்லையில் கப்பல்கள் மூலம் அல்லது கடற்கரைப் பிரதேசங்களின் மூலம் கடல் மாசுறுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், நிர்வகித்தல், முகாமைத்துவம் செய்யும் பணிகளுக்கான திட்டமொன்றைத் தயாரித்துச் செயற்படுத்த முடியும்.

இலங்கை நீர்ப்பரப்பிலும் கடற் பிரதேசத்திலும் சூழல் மாசடைவதைத் தடுக்கும் செயற்பாட்டுக்காக, கடல் எல்லைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட அல்லது இதன் பின்னர் வெளியிடப்படுகின்ற வேறு யாதேனும் கடற்பரப்பினுள் அல்லது இலங்கையின் முன்னைய கடல் எல்லையினுள் மேற்கொள்ளப்படுகின்ற கடல் எண்ணெய் கொண்டு செல்லல் நடவடிக்கைகள், “பங்கரிங்” நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். இவற்றை அரசாங்கம் மேற்கொள்ளும் பட்சத்தில், கடற்கரையையும் கடல் வளத்தையும் பாதுகாக்க உதவியாக அமையும்.

மேலும், பிளாஸ்டிக் பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கும் பாரிய அச்சுறுத்தலாகும். அவை தொடர்பில் சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான அறிவு, மனப்பான்மை, திறமை ஆகியன மேம்படுத்தப்படவேண்டும். அப்போதுதான், கடல்வள சுற்றுச்சூழல், கரையோரங்களைப் பாதுகாக்க முடியும்.

அத்துடன், கடற்கரைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள், தமது குப்பைகளை ஒரு பையிலே எடுத்துச் சென்று, அவற்றை உரிய முறையில் அப்புறப்படுத்தும் நடைமுறை உருவாக்க வேண்டும். மில்லியன் கணக்கான தொன் குப்பைகள் கடலில் சேர்க்கப்படுவது சம்பந்தமாகக் கதைப்பதற்கு முன், எமது வீட்டுக்கழிவுகளை எவ்வாறு அகற்றுவது என நாம் சிந்திக்க வேண்டும். நாங்கள் சூழல் சம்பந்தமாக பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிக் கதைக்கின்றோமே தவிர, நாம் செய்ய வேண்டியவை என்ன என்பது பற்றிச் சிந்திப்பதில்லை. நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுச் செய்தால், எங்களால் நீண்ட தூரம் பயணிக்க முடியும்.

கடலில் உருவாகிய சிறு உயிரினங்கள் கூர்ப்படைந்து, பின்னர் கடலிலிருந்து தரைக்கு வந்த விலங்குகளின் தொடர்ச்சியான கூர்ப்பின் விளைவாகவே, மனித குலத்தின் ஆரம்பமென்பது நிகழ்ந்தது என, விஞ்ஞானிகள் உறுதிப்படுத்துகின்றனர். அவ்வாறான முக்கியமான கடலையும் அதன் கரைகளையும், எந்தளவுக்கு நாங்கள் பாதுகாக்கிறோம் என்பது, எங்களுக்குரிய கடமை என்பதில், மாற்றுக் கருத்துகள் இருக்கக்கூடாது.

# என் மனதின் கிறுக்கல்கள் ஹைக்கூ கவிதைகள்



இலைச் சருகுகள்
உரசிக் கொள்கின்றது.../
காலடிச் சத்தம்

காட்டு மரம்
கானம் இசைக்கின்றது.../
புல்லாங்குழல்

துளிர் விடும் மரம்
தூது அனுப்புகின்றது.../
இளமைக் காதல்

பூமிப்பதிவேட்டில்
வானமதன்
கண்ணீர்த்துளி.../
மழை

பள்ளி விடுமுறை
நாள்
இடைவேளை நேரத்தில்
வட்டமிடும் காக்கை.../
பசி

வெள்ளைக் காகிதம்
தொல்லை
கொடுக்கின்றது.../
பரீட்சை

கடவுளின் கற்பனை
கண்ணைக் கவர்கிறது.../
பெண்

அனிச்ச மலர்
அங்கலாய்க்கின்றது.../
பெண்மை

நாணல் புல்
தலை நிமிர்கின்றது.../
அரும்பு மீசை

உள்ளமொன்றின்
ஊமை மொழி.../
ஒருதலைக் காதல்

பிஞ்சுக் கரங்களில்
தகரத் தட்டுக்கள்
வறுமை

ஓலைக் குடிசையின்
ஓலச் சத்தம்.../
வறுமை

குப்பைத் தொட்டிக்குள்
கோடிக் கரங்கள்.../
பசி

பகலைத் தின்ற
பனித்துளியின் நேரம்.../
நடுநிசி

தாரகைகளின் தாலாட்டில்
உறையும் தனிமை.../
இராப்பொழுது

நிலவொளி கசியும்
நிசப்த கானம்.../
இரவு

**நிலாக்கவி**
**ஸுஹா**
**சம்மாந்துறை**

# வாழ்வின் விடியல் தேடி



அதிரும் வெடி ஒலியில்
உதிரம் உறைந்து விட
எதிரியின் வேட்டுச் சத்தம்
கதிர் என வளர்ந்து விட

அவல நிலைகளிலே
தவழும் மனித குலம்
மிளிர வழி தேடும்
புதிதாய் வழி காணும்

உடைந்த இதயத்திலே
உறையும் சிதில்கள் என
உறவின் அலறல்கள்
உலகின் நியாயங்கள்

சட்டத்திற்கு முன் நிற்கும்
குற்றப் பட்டியலில்
கூடும் மனித இனம்
குறையா அநியாயம்

உழைக்கும் கைகளது
ஓங்க மறுக்கின்றது
இருண்ட மாவுலகில்
இன்பம் மறக்கின்றது

பெண்மை இவ்வுலகில்
பின் போய் நிற்கிறது
அழியா ஆபாசம்
முன்னே செல்கிறது

சக்கரம் என சுழலும்
மனித வாழ்வதிலே
பலதும் பாதியிலே
பறிபோய் நிற்கிறது

நெருப்புக் கனிகள் என
கொதிக்கும் வசவுக்குள்
சிக்கித் தவிக்கின்றோம்
சிறையுலகில் வாழ்கின்றோம்

செழித்த நம் நாடு
செழிப்பை இன்றிழந்து
செல்வது முட் பாதையா??
சேர்வது எவ் விடமோ??

மரணப் படிகளிலே
சனங்கள் கூடியது
வாழ்க்கை இன்பங்கள்
வற்றிப் போகிறது

போதை ஆழ் கடலில்
மூச்சுத் திணறி மூழ்கும்
மக்கள் கூட்டம் இன்று
மரம் போல் வளர்கின்றது

தங்கள் வாழ்க்கைகளை
சொந்தச் சிறைகள் என
மாற்றி அமைத்து விடும்
மனிதம் இன்றுள்ளதேன்??

சோகக் கடலினிலே
பார அலைகள் பல
கரையை மோதாது
இதயம் தாக்கியது

நீதி நிலை காணா
பலரின் குரல் இன்று
வான் வரை ஒலிக்கின்றது
வீணாய்ப் போகின்றது


இளைய தலைமுறைகள்
இழிவு காண்கின்றன
இளைஞர் பலர் இன்று
இடரில் விழுகின்றனர்


காமப் பசி தீர்க்கும்
கொடுமை பல இங்கு
தலை விரித்தே ஆடும்
தீராய் புதிர் ஆகும்

நேயத்தை நிலை நாட்ட
நோகாமல் கால் பதிப்போம்
வாழ்வின் விடியல் தேடி
விருப்புடன் முயற்சிப்போம்..

**அஸ்னா ரியால்**
**இகல கினியம**


# முத்தமிழ் கலசம்
## எனும் பல்சுவை இதழ்
## ஓர் பார்வை












"முத்தமிழ் கலசம்" எனும் பல்சுவை இதழானது, 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி தன் கன்னிப்பயணத்தை ஆரம்பித்து இணையமெங்கும் வலம் வரத் தொடங்கியது. இருமாதங்களுக்கொரு முறை முதலாம் திகதியில் வெளிவரும் இவ்விதழ் பலதரப்பட்ட கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தன்முனைக் கவிதைகள், ஹைக்கூ, குறுங்கதைகள், நகைச்சுவை, நூல்களின் மதிப்புரைகளென அசத்தி வருகிறது.

இதன் ஆசிரியராக சித்தி வபீராவும், கௌரவ ஆசிரியராக தமிழ்நெஞ்சம் அமின் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள். இதன் வடிவமைப்புக்கான பொறுப்பையும் கௌரவ ஆசிரியரே கவனித்து, கண்கவரும் விதமாக மிளிரச் செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பலதரப்பட்ட திறமையான எழுத்தாளர்களுக்கும், கவிஞர்களுக்கும் தம் படைப்பைப் பகிர களம் அமைத்துக் கொடுத்து ஊக்குவிப்பதே இந்த இதழின் முக்கிய நோக்கமாகும்.

முத்தமிழ் கலசத்தின் ஆசிரியர் உரைகளும் சமூகத்துக்கு அவசியமான விடயங்களை உள்ளடக்கி, பயன் தரும் விதமாகவே அமைந்துள்ளன. கட்டுரைகளும் சமூகத்துக்கு படிப்பினையூட்டும் விதமாகவும், விழிப்புணர்வூட்டக் கூடியதாகவும்,பயனளிக்கும் விதத்திலும் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

வாழ்க்கையைச் சுமையாக நினைத்து அல்லலுறும் சகலருக்கும் புத்தாக்கம் அளிக்கும் விதமாக, நேர்மறையான எண்ணங்களை மனதில் விதைக்கும் தொடர் கட்டுரை **"வாழ்தல் இனிது"** இதழுக்கு மணிமகுடமாக அழகு சேர்க்கிறது. இதுவரை ஆறு இதழ்கள் வெற்றிகரமாக வெளியிடப்பட்டுள்ளன. முத்தமிழ் கலசம் இதழ்களை இவர்களின் இணையதளமான www.muththamizh-kalasam.com இல் பார்வையிடலாம். தரவிறக்கம் செய்தும் வாசிக்கலாம்.

மின்னிதழாக மட்டும் வந்து கொண்டிருக்கும் இவ்விதழை அச்சிலும் கொண்டு வருவதற்கான முயற்சியிலும் தற்போது ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிடும் இவர்களின் முயற்சி பாராட்டுக்குரியது.

அடுத்த ஜூலை – ஆகஸ்ட் மாதங்களுக்கான இதழ் 7 வருகிற ஜூலை மாதம் முதலாம் திகதியில் மலரவிருக்கும் இத்தருணத்தில், இதழ் மென்மேலும் வளர்ந்து, இலக்கியப் பணியில் சிறந்து விளங்க நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம்.



**பிரதம ஆசிரியர்**
**சித்தி வபீரா**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதமிருமுறை | இதழ் - 11 | 5 ஜூலை 2021



# முதல் பிரதிகளை பெற்ற கின்னஸ் சாதனையாளர் என்ற பட்டத்தை வென்ற புரவலர் ஹாஷிம் உமர்

### அவர்களுடனான நேர்காணல்

இம்மாத எமது துணிந்தெழு சஞ்சிகையின் ஆண் ஆளுமைக்கான தேடலில் முதல் அதிதியாக கலந்து சிறப்பித்து இருக்கிறார், முதல் பிரதிகளை பெற்ற கின்னஸ் சாதனையாளர்“ என்ற பட்டத்தை வென்ற புரவலர் ஹாஷிம் உமர் அவர்கள். சகலவித எழுத்தாளர்களும் தங்களது நூல்களை வெளியிடும் போது முதலில் நினைவுக்கு வருபவர் புலவர்தான்.

தமிழ் இலக்கிய வட்டாரத்தில் அதிகமாக உச்சரிக்கப்படுவதும் இவரின் பெயரே. பல நூல்களை எழுத வேண்டும் அல்லது பல நூல்களை வாசிக்க வேண்டும் என்ற ஆசை உள்ளவர்களை பார்த்திருப்போம் ஆனால் ஒரு நூலின் முதல் பிரதியை தான் தான் வாங்க வேண்டும் என்ற பழக்கத்தை கொண்டவர்தான் புரவலர் ஹாஷிம் உமர். இதுவரை புலவர் அவர்கள் ஆயிரக்கணக்கான நூல்களின் முதல் பிரதிகளை வாங்கி சாதனை படைத்து புலவர் என்ற பட்டத்துடன் தமிழ் இலக்கிய வட்டாரத்தில் வலம் வந்து கொண்டிருக்கிறார் புரவலர் ஹாஷிம் உமர் அவர்கள்.

மேமன் என்ற மொழியைச் சார்ந்தவராக இருந்தாலும் தமிழ் மொழி மீது இவர் கொண்ட பற்று தமிழ் இலக்கியத் துறைக்கு எண்ணிலடங்கா சேவைகளை செய்பவராகவும் எழுத்தாளர்களுக்கு உதவிக்கரம் நீட்டுபவராகவும் மாற்றியது. புரவலரைப் பற்றி மேலும் நாம் நேர்காணல் மூலம் அறிந்து கொள்வோம்.



நேர்காணல்
**ஜே.எம்.பாஸித்**

நேர்காணல் உதவி: ரிம்ஸா முஹம்மட்



**கேள்வி 01**

**உங்களைப் பற்றி சிறு அறிமுகத்தை குறிப்பிடுங்கள்.**

**பதில்**

நான் இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் குட்டியானா என்ற பிரதேசத்தில் அமைந்துள்ள பாடவியா என்ற தனித்துவமான நகரில் 1947 ஆம் ஆண்டு நவம்பர் 10 இல் பிறந்தேன். இந்தியா – பாக்கிஸ்தான் பிரிவினையின்போது 06 மாதக் குழந்தையாக எனது குடும்பத்தினருடன் இலங்கைக்கு குடிபெயர்ந்து வந்து சேர்ந்தேன். என்னுடைய தந்தையின் பெயரே உமர். தாயாரின் பெயர் ஹவ்வா உம்மா என்பதாகும்.

நான்கு சகோதரர்களுடனும் இரண்டு சகோதரிகளுடனும் பிறந்த குடும்பத்தில் நான் தான் தலைப்பிள்ளை. இலங்கை வந்த நான், ஆரம்ப காலங்களில் கேகாலைப் பகுதியில் வாழ்ந்து வந்தேன். ஆரம்ப வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கேகாலையில் உள்ள சென் மேரீஸ் கல்லூரியில் தமிழ் மொழி மூலம் கல்வி கற்றேன். 1970க்குப் பிற்பட்ட காலங்களிலிருந்து கொழும்பிலேயே தொடர்ந்தும் வசித்து வருகின்றேன்.



**கேள்வி 02**

**நீங்கள் மேமன் மொழியைச் சேர்ந்தவராக இருந்தாலும் தமிழ் மொழியின் மீது உங்களுக்கு எப்படி இவ்வளவு ஆர்வம் வந்தது?**

**பதில்**

பாடசாலைக் காலங்களிலிருந்தே வாசிப்பில் மிகவும் ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வத்துக்குத் தீனி போடும் வகையில் தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் கல்கண்டு மற்றும் தினகரன் பத்திரிகை போன்றவற்றை தொடர்ந்தும் வாசித்து வந்தேன். 1978 ஆம் ஆண்டில் தென்னிந்திய நடிகர் மறைந்த முத்துராமன் இலங்கை வந்த போதிலிருந்தே எனக்கு கலை இலக்கியம் மீது ஆர்வம் ஏற்பட்டது.



ஆரம்ப காலங்களில் கலை இலக்கிய ஆர்வலராக இருந்தேன், பின்னாட்களில் கலை இலக்கியக் கூட்டங்களில், கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில், அதிதிகளைச் சந்திக்கும் நிகழ்வுகளில் என்று பல்வேறு வகையான ஒன்று கூடல்களில் மிகவும் ஆர்வமாகக் கலந்து சிறப்பித்துள்ளேன்.

### கேள்வி 03

**பணம் என்பது யாருக்கும் இலகுவாக கிடைத்துவிடுவதில்லை. நீங்கள் கூட கடின உழைப்பால் உயர்ந்த ஒரு மனிதராகத்தான் இருக்கிறீர்கள். அந்த வகையில் உங்களது வாழ்க்கையில் தொழில் மற்றும் வியாபார ரீதியான அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.**

### பதில்

ஆம், ஆரம்பத்தில் துணி வியாபாரம் செய்து வந்தேன் பின்னர் பல்வேறு வகையான வியாபாரங்களையும் செய்து அவற்றை விருத்தி செய்தேன் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து உருவாக்கிய பல வியாபார நிறுவனங்களை தற்போது மேற்பார்வை செய்து வருகின்றேன்.
நானும் ஆரம்பத்தில் ஒரு கடுமையான உழைப்பாளியாக கடும் முயற்சியுடன் தொழில் புரிய வேண்டி இருந்தது. தற்போது இறைவனின் அருளால் வியாபாரம் நன்றாக சென்று கொண்டிருக்கின்றது.

### கேள்வி 04

**இவ்வாறு நீங்கள் பிறருக்கு உதவி செய்வதன் மூலம் அது எவ்வாறான ஒரு உணர்வை உங்களுக்குள் ஏற்படுத்துகிறது?**

### பதில்

எவ்வளவுதான் பணம் நம்மிடம் இருந்தாலும் அதை நம்மிடம் இருப்பதை விட பிறருக்குக் கொடுத்து உதவி செய்யும் போது ஒரு இரட்டிப்பான மகிழ்ச்சி எனக்குக் கிடைக்கிறது அதிலும் குறிப்பாக திறமையானவர்களுக்கு அவர்களது திறமையை வெளிக்காட்டுவதற்கும் அவர்களின் திறமைக்கான ஒரு களத்தை அமைத்துக் கொடுக்கவும் உதவி செய்யும்போது அது இன்னும் இரட்டிப்பான மகிழ்ச்சியை தருகிறது. ஒரு ஆத்ம திருப்தி கிடைக்கிறது.

### கேள்வி 05

**நீங்கள் முதல் பிரதியை வாங்கும் பழக்கத்தை எப்போது இருந்து ஆரம்பித்தீர்கள்?**

### பதில்

1994 ஆம் ஆண்டிலிருந்து நூல்களின் முதற் பிரதிகளை வாங்க ஆரம்பித்தேன். தொடர்ந்தும் சளைக்காமல் 2021 ஆம் ஆண்டில் 1000 நூல்களுக்கும் மேற்பட்ட நூல்களின் முதல் பிரதிகளை வாங்கியுள்ளேன்.









**கேள்வி 06**

**எழுத்தாளர்களுக்கு கரம் கொடுத்து உதவ வேண்டும் என்ற இந்த உயர்ந்த எண்ணம் உங்களுக்குள் எப்படி வந்தது?**

**பதில்**

ஓர் எழுத்தாளன் நூல் ஒன்றை எழுதி, மிகவும் கஷ்டப்பட்டு அதனை அச்சிட்டு, அதற்கு ஒரு வெளியீட்டு விழாவும் ஏற்பாடு செய்து, இதற்காகவெனச் செலவிட்ட பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியாமல் திண்டாடும் போது, அந்த நிலையில் இருக்கும் குறிப்பிட்ட எழுத்தாளருக்கு தமிழையும் இலக்கியத்தையும் ஆழமாக நேசிக்கும் நான் கைகொடுத்து உதவ நினைத்தேன்.

நூலாசிரியர்களின் முதல் பிரதிகளை வாங்குவதில் ஓர் ஆத்ம திருப்தி எனக்கு கிடைத்தது. எனது நேரம் மற்றும் பொருளாதாரத்தைச் செலவு செய்து பல நூறு மைல்கள் கடந்தும் புத்தக வெளியீட்டு விழாக்களுக்குச் சென்று பல முதல் பிரதிகளைப் பெற்று எழுத்தாளர்களுக்கு கரம் கொடுத்திருக்கிறேன்.

**கேள்வி 07**

**நீங்கள் இலங்கையிலுள்ள எழுத்தாளர்களின் நூல்ளின் முதல் பிரதிகளை மட்டும் வாங்கும் பழக்கம் உள்ளவரா?**

**பதில்**

நிச்சயமாக இல்லை, நான் இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, துபாய் போன்ற பல்வேறு நாடுகளில் நடைபெற்ற புத்தக வெளியீடுகளில் கலந்து கொண்டு பல முதல் பிரதிகளைப் பெற்று பிற நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களுக்கும் கரம் கொடுத்துள்ளேன்.







**கேள்வி 08**

**பிரபல்யமான மூத்த எழுத்தாளரான மானா மக்கீன் அவர்களது நூல் வெளியீட்டு விழா பற்றி குறிப்பிடுங்கள்.**

**பதில்**

இவர் 1994ஆம் ஆண்டில் பிரபலமான எழுத்தாளராக இருந்தார். இவரது பல்சுவைப் பத்தி எழுத்துக்களின் தொகுப்பான “லைட்ரீடிங்” எனும் நூலின் முதலாவது பாகத்தையே நான் முதன்முதலில் முதலாவது பிரதியாக பெற்றுக்கொண்டேன்.

**கேள்வி 09**

**இவரின் நூல் வெளியீட்டு விழாவிற்குக் கூட நீங்கள் தான் செலவு செய்தீர்கள் என்று மானா மக்கீன் அவர்களே கூறி கேள்விப்பட்டிருக்கின்றோம் இது பற்றி குறிப்பிடுங்கள்.**

**பதில்**

ஆம் இந்த நூலுக்கான வைபவச் செலவு புத்தக அச்சிடல் செலவு மற்றும் முதல் பிரதிக்கான அன்பளிப்பு ஆகிய அனைத்தையும் நானே ஏற்றுக்கொண்டு செய்தேன்.










**கேள்வி 10**

**உங்களது 1000 ஆவது முதல் பிரதியை வாங்கிய சாதனை நிகழ்வைப் பற்றி எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.**

**பதில்**

நான் எனது 1000 ஆவது முதல் பிரதியை 2019.11.30 இல் கொழும்பு சாஹிரா கல்லூரியைச் சேர்ந்த சஹன் நெத்மின என்ற மாணவரின் **"சிறகொடிந்த பறவை"** எனும் காவியத்தின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டேன்.

**கேள்வி 11**

**நீங்கள் ஒரே மேடையில் அதுவும் ஒரே நாளில் 40 க்கும் அதிகமான நூல்களின் முதல் பிரதிகளை வாங்கி சாதனை படைத்து உள்ளீர்கள். இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**பதில்**

ஆம் இந்நிகழ்வு இந்தியாவில் நடைபெற்றது. இந்தியாவின் தமிழ்நாட்டில் வருடாந்தம் நடைபெறுகின்ற மணிமேகலை பிரசுரத்தின் நூல் வெளியீட்டு விழாவில் இவ்வாறாக 40 க்கும் அதிகமான நூல்களின் முதல் பிரதியை வாங்கினேன். அன்று 40க்கும் மேற்பட்ட நூல் வெளியீட்டாளர்களுடன் கைகோர்க்கும் வாய்ப்புக் கிடைத்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மணிமேகலை பிரசுரத்தின் வெளியீடுகள் என்று பார்க்கும்போது 15 வருடங்களில் சுமார் 300க்கும் அதிகமான நூல்களின் முதல் பிரதிகளை வாங்கி உள்ளேன்.

**கேள்வி 12**

**நீங்கள் எந்த எந்த துறையைச் சேர்ந்த நூல்களின் முதற் பிரதியை வாங்கியுள்ளீர்கள்?**

**பதில்**

உண்மையாகச் சொல்லப்போனால் நான் வாங்காத துறையே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். கவிதை நூல்கள், சிறுகதை நூல்கள், நாவல்கள், நாடகப் பிரதிகள், கட்டுரை நூல்கள், ஆய்வு நூல்கள், ஆன்மீக நூல்கள், அழகுக்கலை நூல்கள், சமூக நூல்கள், சஞ்சிகைகள் என்று அனைத்துத் துறை சார்ந்த நூல்களையும் வாங்கியுள்ளேன்.

**கேள்வி 13**

**உங்களது புத்தகப் பூங்கா என்ற அமைப்பின் முக்கிய நோக்கம் என்ன?**

**பதில்**

நூல்களை எழுதி அந்த நூல்களை வெளியிட்டுக் கொள்ள முடியாமல் சிரமப்படும் எழுத்தாளர்களுக்கு உதவ வேண்டும் என்பதே புத்தகப்பூங்கா அமைப்பின் முக்கிய நோக்கமாகும். இதுவரை சுமார் 40 நூல்களை புத்தகப் பூங்கா என்ற இந்த என் அமைப்பின் மூலம் வெளியிட்டுக் கொடுத்துள்ளேன்.

**கேள்வி 14**

**எழுத்தாளர்கள் பலரை நூலாசிரியர்களாக பரிணமிக்க செய்துள்ளீர்கள் இதை எவ்வாறு உங்களால் செய்ய முடிந்தது?**

**பதில்**

ஆம் நான் ஏற்கனவே சொன்னதுபோல எனது புத்தகப் பூங்கா என்ற அமைப்பின் மூலமே இதனை நான் செய்து வருகின்றேன். நூல்களை வெளியிட முடியாமல் சிரமப்படும் எழுத்தாளர்களுக்கு இவ்வமைப்பின் மூலம் எனது சொந்த செலவிலேயே அச்சிட்டுக் கொடுத்து அதற்கான வெளியீட்டு விழாக்களையும் சிறப்பாக செய்து கொடுத்து அதில் கிடைக்கும் வருமானங்களையும் எழுத்தாளர்களுக்கே கொடுத்துவிடுவேன். இதன்மூலம் அவர்கள் தங்களுக்கு என்று ஒரு அடையாளத்தை பெற்றுக் கொள்கின்றார்கள்.

**கேள்வி 15**

**இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்கும் நீங்கள் பல சேவைகளை செய்துள்ளீர்கள் அதில் சிலவற்றை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாமே.**


**பதில்**

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் விழாவில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் போட்டிகளை நடத்தி அதில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் மற்றும் விருதுகளை வழங்குவதற்காக பெருந்தொகை பணத்தை “ஹாசிம் உமர் அறக்கட்டளை“ மூலம் வழங்கி வைத்துள்ளேன்.

இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பதற்கும் வளர்ந்து வரும் இளம் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்கும் இந்த ஏற்பாடு ஹாசிம் உமர் அறக்கட்டளை எனும் அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.












**கேள்வி 16**

**புத்தகம் இலக்கியம் சார்ந்த பணிகளை தவிர்த்து மேலும் பல பணிகளை நீங்கள் மேற்கொண்டு வருகின்றீர்கள் அல்லவா? அது பற்றி குறிப்பிடுங்கள்.**

**பதில்**

ஆம் நான் பல்வேறு வகையான பொதுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றேன் அந்த வகையில் கல்வி நடவடிக்கைகளுக்காக அனுசரணை வழங்குதல், ஆன்மீக நிகழ்வுகளுக்காக அனுசரணை வழங்குதல், தனிப்பட்ட எழுத்தாளர்களுக்கான பாராட்டு நிகழ்வு, கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு, பத்திரிகையாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு, நாடக அரங்கேற்ற நிகழ்வு, பட்டிமன்ற நிகழ்வு, நடன அரங்கேற்ற நிகழ்ச்சி போன்றவற்றை நடத்துவதற்கான நிதிப் பங்களிப்பு, ஏழைக்குமர்களின் திருமண நிகழ்வுக்கான நிதிப் பங்களிப்பு, மற்றும் ஏழை பெண்களுக்கான தையல் இயந்திரங்களை வழங்குதல், ஏழைகள் தொழில் தொடங்க பண உதவி செய்தல், பாடசாலைக்கு தொழுகை அறை கட்டிக் கொடுத்தல், சுனாமி ஏனைய அனர்த்தங்கள் மற்றும் கொரோனாக் காலங்களில் நிவாரணப் பொருட்களை வழங்குதல் போன்ற பல சேவைகளை செய்து கொண்டிருக்கின்றேன்.

என்னிடம் இருக்கும் பணத்திற்கு நான் எவ்வாறு வேண்டுமானாலும் செலவழிக்கலாம் ஆனால் நான் செலவழிப்பது ஒரு அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என்பதற்காகவே இதுபோன்ற பல சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றேன்.

**கேள்வி 17**

**இதுவரை உங்கள் புகைப்படம் பல சஞ்சிகைகளில் அட்டைப்படமாக அலங்கரித்துள்ளது. அந்த சஞ்சிகைகள் பற்றி பகிர்ந்து கொள்ளலாமே.**

**பதில்**

கலை முத்து சஞ்சிகை 2002 ஜூலை – செப்டம்பர் இதழில் அட்டைப்படமாக எனது புகைப்படம் பிரசுரிக்கப்பட்டது. அத்தோடு என்னைப் பற்றிய ஒரு கட்டுரையையும் அதில் பிரசுரித்து கௌரவித்தார்கள். அமரர் டொமினிக் ஜீவா அவர்களால் வெளியிடப்பட்டு வந்த மல்லிகை சஞ்சிகையின் 2005 பெப்ரவரி மாதம் வெளிவந்த 310வது இதழில் எனது புகைப்படம் அட்டைப்பட அதிதியாக அலங்கரித்தது.

அதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஞானம் சஞ்சிகை தனது 235 ஆவது இதழில் எனது புகைப்படம் அட்டைப்படமாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்தப் பத்திரிகையில் ஆசிரியர் பக்கத்தில் சஞ்சிகை ஆசிரியர் டாக்டர் ஞானசேகரன் என்னைப்பற்றிய குறிப்பு ஒன்றையும் எழுதியிருந்தார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் இனிய நந்தவனம் சஞ்சிகையில் 2020 மார்ச் மாத இதழில் எனது புகைப்படம் பிரசுரிக்கப்பட்டது. அதில் **"1000 முதல் பிரதிகள் பெற்ற கின்னஸ் சாதனையாளர்"** என்ற தலைப்பில் என்னைப் பற்றிய கட்டுரை ஒன்றையும் பிரசுரித்து கௌரவித்திருந்தார்கள்.




**கேள்வி 18**

**இன்றைய காலங்களில் நீங்கள் எந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும் உங்களது புகைப்படம் பத்திரிகையில் பிரசுரம் ஆகாமல் இருந்தால் தான் ஆச்சரியம். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

**பதில்**

ஆம் நான் முதற் பிரதி பெறுனராக இருப்பதனால் பல நிகழ்ச்சிகளில் பிரதம அதிதியாக, சிறப்பு அதிதியாக, விசேட அதிதியாக பல்வேறு வகையான கலை, இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளேன். இதனால் என்னுடைய புகைப்படங்கள் அதிகமாக பத்திரிகைகளில் பிரசுரமாகும் வாய்ப்பு இருக்கிறது.

**கேள்வி 19**

**உங்களின் இந்த ஆர்வமும் பங்களிப்பும் உங்கள் வியாபார நடவடிக்கைகளை பாதிக்கவில்லையா?**

**பதில்**

இறைவனின் அருளினால் எனது தொழில் நிறுவனம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. ஆரம்பத்தில் 19 மணித்தியாலங்கள் எனது வியாபாரத்திற்காக செலவிட்டேன். தற்பொழுது 4 மணித்தியாலங்கள் தான் என்னுடைய வியாபாரத்திற்காக செலவிடுகிறேன். மீதம் இருக்கும் நேரங்களில் சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகிறேன்.






**கேள்வி 20**

**உங்களுக்கு புரவலர் என்ற அடைமொழியைத் தவிர வேறு ஏதும் அடைமொழிகள் உள்ளனவா?**

**பதில்**

ஆம் மனிதநேய மாமணி, கலை வள்ளல், கொடை வள்ளல், கலை இலக்கியவாதிகளின் காவலர், இலக்கிய காவலன், மொழிக் காவலர், கலாநிதி (டாக்டர்) போன்ற அடைமொழிகள் உள்ளன.

**கேள்வி 21**

**துணிந்தெழு சஞ்சிகை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்**


இந்த சஞ்சிகை ஆளுமையாளர்களை வெளிக்கொண்டு வருவதற்கு ஒரு களத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறது. குறிப்பாக பெண் ஆளுமைகள் சமூகத்திற்கு இந்த சஞ்சிகை மூலம் வெளிக்கொண்டு வரப் படுகிறார்கள். தற்போது துணிந்தெழு சஞ்சிகை ஆண் ஆளுமைகளுக்கும் வாய்ப்பளித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

**கேள்வி 22**

**இறுதியாக எமது துணிந்தெழு வாசகர்களுக்காக நீங்கள் கூற விரும்பும் செய்தி என்ன?**

**பதில்**

விட்டுக் கொடுப்பவன் கெட்டுப் போவதில்லை, கெட்டுப் போகிறவன் விட்டுக்கொடுப்பதில்லை. இதைத் தான் நான் அனைவருக்கும் இறுதியாகக் கூற விரும்புகிறேன்.











Infaz Salahudeen
Photographer





# விரல்களை அழ வைத்திடாதே!

சாக்கடையில் சிக்குண்டவன் பெயரை போர்த்திப் புகழ்ந்து கிறுக்குவதற்காகவே சாக்குப் பைகளோடு வந்து நிற்கின்றான்.

பைகளுக்குள் சில பேனா முனைகள் தொலைந்து விட்டதை உங்கள் விரல்கள் மறுத்துவிடக் கூடாது.

சீசன்களுக்கு தொலைந்து போகும், சில பேனா முனைகள் பாசங்கள் கூடி பரிதவிக்கிறது கைப் பைகளுக்குள்ளும் சட்டைப் பைகளுக்குள்ளும் சரிந்து வீழ்ந்து.....!

பேனாக்களின் வேடத்தில் சாமத்தில் சில பேய்கள் நடமாடுகிறது ஊளையிடும் நாய்களின் குரலை கேட்கவும் முடியவில்லை பார்க்கவும் முடியவில்லை அவ்வளவு தொல்லை...!

ஊளையின் குரல்தனில் நான்கு வரிகளை இணைத்து நாளிதழ்கள் சொல்லும் வரிகள் நாவிழந்து செல்கிறது பேய்களின் விரல்களுக்கிடையில் பேனா முனை சிக்குண்டதினால்....!

அரச இயந்திரங்கள் சரியாக இயங்க வேண்டுமாயின் உன் பேனா முனைகள் தவறாமல் தர்மம் காக்க வேண்டும் என்பதை ஒரு போதும் உன் விரல்கள் மறந்துவிடக் கூடாது.

உன் விரல்களை அழ வைத்திடாதே கைகள் பைகளின் இடை பார்ப்பதை நிறுத்திவிடச் சொல் துணிந்தெழு நீ உண்மைகளை உரக்க எழுது நீ.....



**ஏ.எல்.எம்.சியாத்**
**பொத்துவில்**

# சிந்தித்து நீயும் வாழ்ந்தால்

உலகத்திலே வாழச்
சொல்லி பூமியிதை
கொடுத்து விட்டான்
மானிடர் இரு பிரிவாய்

படைத்து அவன்
வாழ விட்டான்
கண் நிறைய கனவோடு
கண்ணீருடன் தடை தாண்டி

வயித்துப் பசி போக்க
வாழ்வதனை வாழுகின்றான்
தொழிலிலும் பல பிரிவு
மானிடரிடம் ஏற்றத்தாழ்வு

மனம் நிறைய கனவுண்டு
சிந்தித்து வாழ

அறிவுண்டு மனிதனிடையே
பிளவுண்டு ஒற்றுமைதானடா
இங்கில்லை.

உன் குருதி ஒரே
நிறம் உன் இனமும்
மனித இனம் வாழும்
உலகம் ஒன்றடா

சிந்தித்து நீயும்
வாழ்ந்தால் சிறப்பாய்
மாறுமே மனித வாழ்வு



**மஜினா உமறு லெவ்வை**
**மாவடிப்பள்ளி**



# சொல்லு சொல்லாக

மாணவர்களுக்காய் செயலமர்வொன்று
மதிப்புக்குரிய நிறுவனமொன்றால் இலவசமாக
நடந்தேறியது அன்று

இடைக்கிடை போய் பார்த்தேன்
அழகிய அர்த்தமுள்ள உரைகள் அரங்கேறியது

உணவில் விஷமாம்
உடலுக்கு ஆபத்தாம்
அடியோடு தடுத்து
தோட்டங்கள் செய்வோமென்ற
தொனிப் பொருளில் மூழ்கியிருந்தனர்
தோட்டப் பாடசாலைக்கு வந்த தொண்டர்கள்

கடையிலே வேண்டாம்
கருப்பட்டி கூட
கைபட உழைத்து சாப்பிடாதவிடத்து
கலக்கும் நஞ்சு உடம்பில்
கடுமையாய் சொன்னார்கள்
கவனித்தனர் குழந்தைகள்
கவனம் குவிந்தது என்னில்
கவனிக்கவென டீ ஊற்ற முனைந்த
கல்வித்தாகம் தீர்க்கும் சக ஆசான்களிடமே.....

டீ வேண்டாம் மாவு கூடாதாம்
டீச்சர் நிறுத்திடுங்க
தண்ணீர் மட்டும் தான் குடிப்பார்கள்
தடுமாறிப் பிரயோசனமில்லை
தடுமாற்றமின்றி சொன்னேன்
தெளிவாக உறுதியோடு

"சொல்லு சொல்லாக"
சுவைப்பார்கள் ஊற்றிடுங்கள்
சுலமாக சொன்னார் அதிபர்
ருசித்துக் கொண்டிருக்கிறார்கள் வேண்டாமென்று
வெட்டிப்பேசிய ஈஸ்ட் போட்ட பனிஸைக்கூட
விட்டுவைக்காமல்
அங்கேயே அப்படியே
உரையை முடித்துக் கொண்டே

சொல்லு சொல்லாக
காற்றிலே பறந்து போனது
என் மனம் மனித இனத்தை
எண்ணி நொந்து போனது

**பின்த் அமீன்**
**ஆசிரியை**

# நானுமொரு பூனைக்குட்டி போல



எந்தக் கரமும்
அணைக்காதா,

எந்த உள்ளமாவது
இறங்காதா,

எந்த கால்களாவது
உரசிக்கொள்ள
அனுமதிக்காதா,

எந்த ஜீவனாவது
ஒரு–சொட்டு
இரை போடாதா,

எந்த கைகளாவது
இறுகக்கட்டிய
கயிற்றை அவிழ்க்காதா,

எந்த வீடாவது
உள்ளேயே தங்கிட
அனுமதிக்காதா,...

என்றபடியே,

நானுமொரு
பூனைக் குட்டியாய்.

**அஸ்றம் காஸிம்**

# போதும்!!! போதும்!!!

இன்னும் இன்னும்
வேண்டும் என்று
பேரவா கொண்டது
போதுமடா...

இருப்பதைக் கொண்டு
வாழ்ந்து பழகடா...
உன்னைவிட்டு கடனோ
தொலைதூரம்
போகுமடா...

இருப்பவை எல்லாம்
எல்லோரிடமும் இருந்தால்
வாழ்க்கையிலே
சுவாரஷ்யம் ஏதடா...

பிறரிடம் இருப்பது
இருக்கட்டுமே
உன்னிடம் உள்ளதே
போதுமென மகிழ்ந்து
வாழடா....

உன் போராசைகளை
அடைந்திட
வேஷங்கள் போட்டு
பிறரையும் ஏமாற்றி
நீ அடையும்
உன் பேராசைகள்
நிலையானதாய் தான் இருந்திடுமா?

வீணான அவா
நஷ்டத்தை
விளைவிக்குமடா...
களிப்பான வாழ்வும்
கலைந்து தான் போகுமடா...

போதும் என்று
வாழ்ந்து பாரடா...
மன அழுத்தமெல்லாம்
ஓடித்தான் போகுமடா...

உன் நிலை உயர
உன் உழைப்பினை போடு
போதாது போதாதென...

உன் இலக்கினை அடையும் வரை
உன் முயற்சிகளை போடு
போதாது போதாதென...

உன் பேராசைகளை அடக்கிட
உன் மனதிற்கு கடிவாளமிடு
போதும் போதுமென...



இவள்
எண்ணங்களின் எழுத்தழகி
அறூபா அஹ்லா
கல்முனை

# திறமை



இன்று இறைவனால் அளிக்கப்பட்ட அருட்கொடைகள் அதன் அருமை பெருமை தெரியாது உதாசீனம் ஆக்கிக் கொண்டு இருக்கிறது. அவற்றில் ஒன்று தான் நம்முள் மறைந்துள்ள திறமை.

ஒவ்வொரு மனித படைப்பினுள்ளும் இறைவன் ஒரு திறமையை மறைத்து வைத்துள்ளான். அத்திறமையை நாம் கண்டு பிடித்து அதன் வழிகாட்டல்கள் பெற்று எம் பாதையை சீரமைத்துக் கொள்வது நமது கைகளிலேயே தங்கியுள்ளது.

ஆனால் இன்று தனக்கு திறமை உள்ளதா?
என்று அடுத்தவரிடம் கேட்குமளவுக்கு தன்னை அறியாத நிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். இன்று தங்கள் திறமையால் வென்றவர்களே சிறந்த வெற்றியாளர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

சமூகத்தில் பாடக்கூடியவர்கள், ஆடக்கூடியவர்கள்,
பேசக்கூடியவர்கள் என்று அதிகமாக வெளிப்படையான திறமைகள் காட்டக்கூடியவர்கள் இருப்பதனால் இவைகள் மட்டும் தான் திறமைகள் வேறு என்ன இருக்கிறது? எம்மிடம் இவைகள் இல்லையே என்று தன்னை தானே மட்டம் தட்டி கீழ் மட்டத்தில் இருந்து யோசிக்கின்றனர்.

இதுவே நாம் அறியாமல் விடும் தவறு ஆகும். பாடசாலையை பொறுத்தவரையில் கலை நிகழ்ச்சிப் போட்டி நிகழ்ச்சி என்று நிகழ்ச்சிளை செய்தாலும் ஒவ்வொரு முறையும் அதே மாணவன் செல்லும் நிலையே இன்று காணப்படுகிறது இதனால் தன் வாழ்நாளில் ஒருநாள் ஆவது மேடை அனுபவம் இல்லாதவர்களாகவே பாடசாலையை விட்டு வெளியேறுகின்றனர். இது அந்த மாணவனின் பிழையே அன்றி யாருக்கும் பிழை கூற முடியாது.

இல்லாமல் போகும் சந்தர்ப்பம் ஏதோ ஒரு வகையில் இன்னொரு முறை கிடைக்க வாய்ப்புகள் கிடைத்தாலும் அதன் மதிப்பு அறியாமல் விட்டு விடுகிறோம்.

திறமைக்கு வாய்ப்பு நிச்சயம் உண்டு என்பதை புரிந்து எம்முள் மறைந்துள்ள திறமைக்கு வாழ்க்கை கொடுத்தால் நம் வாழ்வு சிறக்கும்.

**அம்மார் ஹசன் கியாஸ்**
**திஹாரிய**
**இஸ்லாஹிய்யா அறபு கல்லூரி மாணவன்**



# பைத்தியம் தான் பிடித்துவிட்டது

**(ஆஷிக் இர்பான் - பிபிலை)**

அவள் தான், அவளே தான் தனக்கானவள் என்று அவனுக்கும் தெரியும். அவளிடம் சொல் என்று நெஞ்சமும், அவளிடம் செல் என்று கால்களும் கெஞ்சுகின்றன. ம்ம்... நீங்கள் நினைப்பது சரி தான். அதே நா முத்துக்குமாரின் வரிகள் தான். என்ன தான் ஹரிசரன் குரல் காதுகளுக்குள் ரீங்காரமிட்டாலும் அவன் மனக்குரலின் சப்தம் தான் அங்கே ஓங்கி ஒலிக்கிறது.

என் கணிப்பு சரியாக இருந்தால் அன்பும் அச்சமும் இரகசியக் காதலர்களாக இருக்க வேண்டும். அன்பின் பின்னாலேயே அச்சமும் வந்துவிடுகிறது. இவர்கள் இருவருக்கும் இழப்பு தான் தரகர் என்றும் ஒரு சந்தேகம் இருக்கிறது எனக்கு. ஐயோ! சும்மா கிட மனமே. உன் தொல்லை தாங்கவில்லை. காதல் வந்தாலே இந்த உள்ளங்களுக்கெல்லாம் கன்னதாசன் நினைப்பு வந்துவிடுகிறது. என்று தனக்குத் தானே பைத்தியம் போல பேசிக் கொண்டிருந்த அகிலன் சுதாரித்துக் கொண்டு சுற்றி ஒரு நோட்டம் விட்டான் யாராவது பார்த்திருப்பார்களா என்று. மூடிக்கிடந்த அந்த அறைக்குள் யார் தான் பார்க்கப் போகிறார்கள். அப்படியே பார்ப்பதாக இருந்தாலும் திறப்புத் துளை வழியாகத்தான் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் அளவுக்கு கேவளமான புத்தி தன் வீட்டில் யாருக்கும் கிடையாது என்பது அவனது புத்திக்கு தெரிந்திருந்தது. ஆனால் மனது ஏனோ நம்பவேயில்லை. கண்கள் அலைந்து கொண்டே இருந்தது. உள்ளம் கொலைக் குற்றவாளியின் உள்ளம் போல படபடத்துக்கொண்டே இருந்தது.

இது என்ன வம்பாகிப் போய் விட்டது. வந்த வேலையைப் பாருடா அகிலா என்று முனுமுனுத்துக் கொண்டே வாயில் கடித்துக் கொண்டிருந்த பேனையை தாளில் வைத்து தான் எழுதிக்கொண்டிருந்த கட்டுரையை தொடர்ந்து எழுத ஆரம்பித்தான். இரண்டு வரிகள் கூட தாண்டவில்லை. அந்த ஓடுகாலி மனது அவளையே சுற்றி அலைய ஆரம்பித்தது. அது அவனுக்குப் பிடிக்கவேயில்லை. ஆனால் அந்த நினைப்பால் எங்கோ ஒரு மூலையில் ஏதோவொரு சுகத்தை அனுபவிப்பது மட்டும் அவனுக்கு தெரிந்தது. அந்த ராஜ போதையில் இருந்து வெளியே வர அவனுக்கு மனது கூடவேயில்லை.

திடீரென்று மின்சார ஒழுக்கில் கைவைத்தது போல ஓர் எண்ணம் குறுக்கிட்டு அவனது போதை சுகத்தைக் கலைத்தது. என்ன நடந்தாலும் மீடியா துறையில் இருக்கின்ற ஒரு பெண்ண காதலிக்கவும் கூடாது, கல்யாணம் பண்ணவும் கூடாது என்று வைராக்கியமாக இருந்தாயே அகிலன், இப்போது ஏன் இவளைக் காதலிக்கிறாய், உன் வைராக்கியம் எல்லாம் எங்கே அகிலன். இருந்தாலும் இவள் அப்படி இல்லை என்று எனக்கு நன்றாகவே தெரியும். இவளுக்காக வைராக்கியத்தை விடுவது ஒன்றும் அவ்வளவு பெரிய தவறில்லை. அந்த வைடூரியம் வேண்டும் என்று முடிவான பின்னர் வைராக்கியம் எல்லாம் ஒரு பொருளா என்ன? . தூக்கி வீசடா அந்த வைராக்கியத்தை.

இல்லை இல்லை இருந்தாலும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் எடுத்துவிட்டால் அதை மாற்றவே கூடாது, உறுதியாக இரு அகிலா. உறுதியாக இரு. இல்லை இந்த வைராக்கியமே தவறு, ஊடகத்துறையில் இருக்கின்ற நாமே நம்மோடு வேலை செய்பவர்களை தவறாக நினைத்து வெறுத்துவிட்டால் வெளியே இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள். சீ... கடைசியில் நீயும் பொதுப்புத்தியில் நின்றே யோசித்திருக்கிறாயே. என்ன ஒரு கேவளமான ஜென்மம் நீ அகிலன். இப்படி மாறி மாறி நடைபெற்ற யுத்தத்தால் அவனது உள்ளம் பாலஸ்தீன மக்களின் வாழ்க்கை போன்று பதற்றத்திலேயே இருந்தது.

உண்மையிலேயே ஊடகம் என்ற சொல் அவ்வளவு கேவளமானது தானா? அப்படியானால் என்ன இதுக்கு நீ அதில் உத்தியோகம் செய்கிறாய். நியாயமான கேள்வி தான். நீ நினைப்பது மாதிரியே பெண் வீட்டிலும் நினைத்தால் உனக்கு யாரு பெண் தருவார்கள் அகிலன். இதுவும் நியாயமான கேள்வி தான். ஐயோ சத்தியமாக

எனக்கு பைத்தியம் தான் பிடித்துவிட்டது. தனியாக பேசிக்கொண்டிருக்கிறேனே. இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும்.

உடனே அவளை நேரில் சந்தித்து சொல்லியே ஆக வேண்டும் இல்லாவிட்டால் என் தலையே வெடித்து விடும். நேரில் சந்தித்து சொல்லப் போனால் பயத்தில் என் நெஞ்சே வெடித்து விடுமே. எப்படிப் பார்த்தாலும் சாவது மட்டும் உறுதி.

இருந்தாலும் இத்தனை நாட்களில் நான் அவளைக் காதலிக்கிறேன் என்று அவளுக்குத் தெரியாமலா இருக்கும். தெரிந்தும் ஏன் காட்டிக்கொள்ளாமல் இருக்கிறாள். காட்டிக்கொள்வதாக இருந்தாலும் அவள் எப்படித்தான் அதைக் காட்டுவாள். அதுசரி காட்டிக்கொள்வதாக இருந்தாலும் அவளுக்கு என் மீது காதல் இருந்திருக்க வேண்டுமே. காதல் இருந்தால் தானே காட்டிக்கொள்வாள். அப்படியே காதல் இருந்தாலும் பெண்கள் முதலில் சொல்வார்களா என்ன?

ஒன்று புரிகிறதா அகிலன். காதல் வேர் போன்றது. வேர் நுழையும் போது மண்ணுக்கு வலிக்காது, வலித்தால் தானே மண் அதை முளையிலேயே தடுத்திருக்கும். இருப்பினும் சிறு வலியொன்று இருந்திருக்கும் ஆனாலும் அந்த வலி சுகமாக இருந்திருக்கும் காதுக்குள் குச்சியை விட்டு மெல்லமாக குடைவது போல. ஆனால் அந்த வேர் பற்றிப் படர்ந்து விருட்சமான பின்னர் அதை மண்ணில் இருந்து பிரித்தெடுக்கும் போது தான் மண்ணுக்கு வலி ஏற்படும். அந்த வலியின் வடு குழியாக அப்படியே இருக்கும். இப்போது இந்தக் காதல் உனக்குள் வளர்ந்து விருட்சமாகிவிட்டது. நீயே வெட்ட நினைத்தாலும் அதன் வடு உன்னை விடாது. இப்போதே சுதாரித்துக்கொள் அகிலன்.

உடனே அழைப்பை ஏற்படுத்தி அவளிடம் சொல்லியே ஆக வேண்டும். சொன்னால் என்ன பதில் சொல்லுவாள் என்ற பயம் என்னைக் கொள்கிறதே ஆண்டவா என்னைக்காப்பாற்ற யாருமே இல்லையா என்று புலம்பிக்கொண்டே முன்னால் இருந்த மேசையில் கையை ஓங்கித்தட்டும் போதே, தொலைபேசி அழைப்பொன்று குறுக்கிட்டது. மேசையில் குவிந்து கிடந்த தாள்களுக்கடியில் புதைந்து போன தொலைபேசியை எடுத்துப் பார்த்தவன் ஒரு கனம் திகைத்துப்போய் விட்டான். ஆம் அது அவளே தான். எப்படியாவது இன்று சொல்லி விடவே வேண்டும் என்று வைராக்கியத்தோடே அழைப்பை எடுத்துப் பேசினான். அவனுடைய வைராக்கியத்தின் வீரியம் பற்றி உங்களுக்குத் தான் தெரியுமே. ஒன்றரை மணி நேரம் கதைத்து முடித்தும் அவன் கடைசி வரை சொல்லவேயில்லை. சோடா போத்தல் வாயுவைப்போன்று உள்ளேயே இருந்தால் தான் காதலின் சுகத்தை அனுபவிக்க முடியும் என்று அவன் காதில் யாராவது ஓதி ஊதிவிட்டார்கள் போலும். இருந்தாலும் இந்த சமூக வலைத்தள நூற்றாண்டிலும் காதலை சொல்வது இவ்வளவு கடினமா என்ன?



# ஆயுள் !

மூன்றெழுத்தில்
முக்காடு போர்த்தி
முட்டித்தள்ளும்
கருவறையில்
ஆரம்பமாகி
மூன்று பிடி மண் எடுத்து
துவிமூடும் கல்லறை வரை
நடமாடும் காலமே ஆயுள்!

கண்ணிமைக்கும்
பொழுதில் ஆயுள்
ஆரம்பிக்கின்றது
ஒரு சிலருக்கு
அதே ஆயுள் முடிகிறது
இன்னும் சிலருக்கு !

இதற்கிடையில் வாழும்
மனிதமே நீ மறவாதே
ஆயுள் என்பது
குருகிய கால வாழ்க்கை
அது கண் இமைக்கும்
நொடியில் கரைந்து
காணாமல் போய்விடும் !

மண்ணுக்கும்
பொன்னுக்கும்
சண்டையிட்டு
தன் ஆயுளின்
அர்த்தமே தெரியாமல்
தன் வாழ்விற்கு
முற்றுப்புள்ளி
இடுவதை விட !

அன்பு நிறைந்த இவ்வுலகில்
அன்புக் கரம் கோர்த்து
வாழ்ந்து விட்டுச் செல்
உன் ஆயுள் மறைந்தாலும்
பிறர் இதயங்களில்
பூத்த நீ என்றும்
மறையவே மாட்டாய்!

**இவ்வரிகளுக்கு சொந்தக்காரி,**
**அகீலா ஜவுபர்.**
**புத்தளம் ஏத்தாளை.**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

@skytamil.lk

மாதமிருமுறை | இதழ் - 11 | 5 ஜூலை 2021



# பெண்ணியல்

பெண்கள் என்பவர்கள் பலவீனமான ஒரு பிறவியாக பார்க்கப்படுகின்றார். அவர்களால் தனித்துப் போராட முடியாது என்றும் அடுத்தவர்களின் உதவிகள் மூலமே பயணிக்க முடியும் என்ற நிலைப்பாடு காணப்படுகின்றது.

பெண் என்பவள் அடுப்பங்கரை தலைமை பொறுப்பை மட்டுமே ஏற்று செயற்பட முடியும் என்ற எண்ணம் பெண்களுக்குள்ளும் வந்து விட்டது. ஆனால் சமூகத்திற்கும் சில பெண்களுக்கும் தெரியவில்லை.

மகளாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும், தாயாகவும் பல படி நிலைகளை கடந்து செல்லும் அவளிடம் எதையும் தாங்கும் வலிமை உள்ளது. சொந்தங்களினால் வரும் சுமைகளை சுமக்கத் தெரிந்த அவளுக்கு சொற்களை சிறைப்பிடிக்கத் தெரியவில்லை.

அன்று பெண்ணை பழி கொடுப்பதற்கு பயன்படுத்தினர். இன்று பழி வாங்குவதற்கு பயன்படுத்துகின்றனர். பேர் ஊற்றாய் பெருக்கெடுக்கும் பேரிழப்புகளை மூடி மறைத்தாலும் அதனை அவளால் முழுமையாக மறந்திட முடியாது.

தயக்கம் என்பது அவளின் பிறவி குணம் அல்ல. அது பிறர் அவளுக்கு கொடுக்கும் பிரதிபலன். மாய வலையில் வீழ்ந்தாலும் மங்கையின் மனம் மாறுவதில்லை.

பெண்மையை தூற்றுவோரை தன் வயிற்றினில் சுமந்தவளும் ஒரு பெண்தான். சல்லடையில் சிக்கிய சில்லரையாய் சிதைந்தாலும். சிரிப்பைக் கொண்டு அதனை சிதர வைத்து விடுவாள். காலங்கள் கழிகின்றது. காயங்கள் மாற்றம் பெறுகின்றது ஆனால் அவளின் கனவுகள் கல்லாய் உறைகின்றது.

கலங்கியவளாய் காலம் தோறும் காட்சிப்படுத்தும் ஒரு பொருளாய் பார்க்கப்படுகின்றாள். அவள் இன்னும் தன் பிறப்பிற்கான அர்த்தத்தை அறிந்து கொள்ள ஆவல் கொள்ள வில்லை.

சூழ்ச்சிகளுக்கு மத்தியில் சூற்சபமாய் பயணிக்க தெரிந்த அவள் சுதந்திர காற்றை சுவாசிக்க விரும்பவில்லை. பெண்ணாய் பிறப்பதற்கு பெரும் தவம் செய்து உள்ளாய் என கூறுவோர் பிளைப்பதற்கான வழியை பிடிங்கி கொள்கின்றனர்.

பெண்ணிற்கு பல பெயர்கள் உள்ள போதிலும் தாய்மையின் தலைவியாய் தலை நிமிர்ந்து நிற்கின்றாள்.
ஆணிற்கு ஒரு சில தடைகளை குவிக்கும் சமூகம். பெண்ணிற்கு ஓராயிரம் தடைகளை விதிக்கின்றது.

ஆணிடம் நீ எதுவாக போகின்றாய் என்று கேட்போர் பெண்ணிடம் நீ இதுவாகத்தான் ஆக வேண்டும் என திணிக்கின்றனர். சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது ஆனால் அத்தியவசிய தேவையை பூர்த்தி செய்யப் போராடும் பெண்ணிற்கு அல்ல. அத்தியாவசியமற்ற தேவைக்காக அலையும் பெண்ணிற்கு.

அவளின் உள்ளத்தின் ஓசையை அலட்சியமாய் தட்டிக் கழிக்கப்படுகின்றது. கனவை நனவாக்க ஒரு பக்கமும் தன் மானத்தை காக்க மறு பக்கமும் ஓடுகின்றாள். ஆனாலும் ஒரு போதும் ஓய்ந்து விட உழைப்பதில்லை.

உயிர் கொடுத்து உருவம் கொடுத்த பெண். ஒரு உடலாக சிலரால் பார்க்கப்படுகின்றாள். உடல் சிதைக்கப்பட்டு உருவம் உருக்குலைக்கப்பட்டு வீதி ஓரங்களில் வீசப்படும் நிலை இன்று. ஒரு சில நிமிடம் அவளுக்கு உள்ளம் என்ற ஒன்று உள்ளது. அதில் உணர்வுகள் நிறைந்தது என்ற எண்ணம் உருவானால் அவளுக்கு இவ்வாறு நடைபெறுமா?

சாதனை படைத்த பெண்கள் காணப்படுகின்றனர். சாதனை படைக்க இருக்கும் பெண்களும் காணப்படுகின்றனர். ஆனாலும் அவர்களுக்கு சவால்கள் சுழல்காற்றாய் சுற்றுகின்றது. மாற்றமாக தாம் மாற நினைத்து பின் தன்னை மாற்றிக் கொள்கின்றனர்.

தாழ்ந்து விடும் பெண் வீழ்ந்தே கிடப்பதற்கு விரும்புவது இல்லை. ஆனாலும் வேறு வழி இருப்பதில்லை. அடிமைப் பெண்ணா நீ ஆளும் பெண்ணல்லவா நீ என்று அழு குரல் அவளின் கண்ணீரில் அலை மோதும். ஆனால் வெளியில் சொல்ல வார்த்தை இன்றி அமைதியாய் அடங்கிவிடும்.

அயலவர், உறவினர் என்ற உறவுகளின் மூலமே இன்று அவளின் கனவுகள் உதாசீனம் செய்யப்படுகின்றது. அவளின் கண்ணீரைத் துடைக்க இரு கரங்கள் மட்டும் காணப்படுகின்றது. கனவுகளை அழிக்க ஆயிரம் கைகள் ஓங்குகின்றது.

உதவி செய்வதற்கு சிலர். உதாசீனம் செய்வதற்கு பலர். தட்டிக்கொடுக்க சிலர். தள்ளி விட பலர். இழப்பதற்கு எதுவும் இல்லை என்று நினைத்துக் கொண்டு இழக்கக் கூடாத நேரத்தை இழக்கின்றாள். அறிவைக் கொண்ட அவள் இலக்கை அடைவதற்கான வழிகளை தொலைக்கின்றாள்.

அவளின் அதிகாரம் அடுப்பங்கரைக்குள் மட்டும் தான். அதனை விட்டு வெளிவந்தால் அவமானங்கள்தான் மிஞ்சும். இதுவா எனக்கு விதிக்கப்பட்ட வாழ்க்கை ?

இத்தனை கஷ்டங்கள் இனியும் வேண்டாம் என வருந்தி தன் உயிரை மாய்த்துக் கொள்கின்றாள்.

**பா. அர்சிதா**
**காவத்தமுனை**



# வாழ்வதற்கு கற்றுக்கொள்

மனிதன் வாழ்வதற்கு கல்வி கற்க வேண்டும் என்ற கோட்பாடு இன்று உலகெங்கும் நிலை பெற்றுள்ளது. "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு "எனும் அறிவுரையை மக்கள நன்குணர்ந்துள்ளனர். இதனாலேயே இன்று வாழும்வரை அதாவது இறக்கும் வரை கற்க வேண்டும் என்ற கோட்பாடு வழுப்பெற்றுள்ளது.

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே"**

என்கிறது ஔவை வாக்கு. மனிதன் தன் ஆயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும் என்பது கல்வியியலாளர்களின் கருத்தாகும். "கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான்" என்ற கூற்றும், தனைமே வலியுறுத்துகின்றது. கல்வி மூலம் அறிவை, குழலை, சமூகத்தை பண்பாட்டு மரபை நாம் ஆராய்ந்து கொள்ளலாம். ஆய்தலுக்கு கல்வியே ஏற்ற கருவி. கல்வியானது மனிதனிடத்துள்ள பூரணத்தை வெளிப்படுத்துகிறது. அறியாமைத் திரையை அகற்றி அறிவென்னும் ஒளியைக் கொடுக்கிறது. ஒருவனிடத்து உள்ளமைந்து கிடக்கும் ஆற்றல்களை, திறமைகளை வெளிப்படுத்த கல்வி முனைகிறது.

கல்வி ஒரு மனிதனின் வாழ்க்கை முழுவதும் ஒன்றாகவே பயணிக்கிறது. ஆனால், குழந்தை பருவத்தில் கற்கும் போது முழுமையான பரிமாணம் அடைந்து முழுமையான மனிதனாகவும் சமூகத்திற்கு உதவிகளை அளிக்கும் வகையிலும் அடைகிறது. கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று நாம் அறிந்திருக்கின்றோம். எனவே தான் கற்றவர்கள் எங்கு சென்றாலும் தாழ்ந்துவிடுவதில்லை.

"மாந்தர் தம் கற்றனைத் தூறும் அறிவு "என்பது வள்ளுவர் கண்ட உண்மை. கலவி என்பது மனித அடிப்படை உரிமைகளில் ஒன்றாக இன்று கருதப்படுகின்றது. அறிவு, அற்றங்காக்கும் கருவி. வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது கல்வியாகும். மனிதனை சூழ்நிலைக்கேற்பச் சிறந்த முறையில் வாழ்வதற்கு வழிப்படுத்துவதாகவும் சிறந்த சீரிய, ஒழுக்கநெறியில் மனிதனை வாழச் செய்வதும் கல்வியாகும்.

கல்வி மனிதனது கண்ணுக்குச் சமனாக கருதப்படுகின்றது.

**"கண்ஓடையர் என்பர் கற்றோர்"** எனும் உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது. வாழ்க்கையின் நோக்கம் மற்றும் இலட்சியம் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ள கல்வி உதவுகின்றது. சமூகத்தில் ஓர் ஆற்றல்மிக்க உறுப்பினராக விளங்க வேண்டுமெனில் சமூக மதிப்புகள், குறிக்கோள்கள், நம்பிக்கைகள், விருப்பங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாடு போன்றவற்றை விதைக்க வேண்டும்.

அதாவது, மனிதன் ஒரு கவிஞனாகவோ தத்துவமேதையாகவோ நல்ல ஆசிரியராகவோ திறமைவாய்ந்த ஆளுமையாகவோ வளர்வதற்கு கல்வியே உந்துகோலாக அமைகின்றது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எனவே, ஒரு சிறந்த சூழ்நிலையை உருவாக்க உடல்–உள்ளம், மனவெழுச்சி, சமூக சிந்தனை ஆகியயை ஒன்றுசேர வளர்வதற்கு கல்விதான் வழிகோல முடியும். சுருங்கக் கூறின் கல்வி அனைத்துக்கும் வழிகாட்டும் வானத்தின் பூரண நிலவு. வழிதேடுபவர்களுக்கும் வழிகாட்டும், வழிதவறியோருக்கும் வழிகாட்டும்.

**"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்**
**கெழுமையும் ஏமாப் புடைத்து"**

எனும் குறளின் பொருளை அறிந்து கொண்டால் கல்வியின் பயனை இலகுவியில் விளங்கிக் கொள்ளலாம்.

சுருங்கக் கூறின் கல்வி தமது வாழ்க்கைக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகும். அதனை நம் வாழ்நாள் முழுமுழுவதும் தேடி கற்க வேண்டும். சமூக, பொருளாதார, அறிவியல், அரசியல் உண்மைகளை அறிந்து புரிந்து கொள்ளவும் எமது ஆளுமையை விருத்தி செய்து கொள்ளவும் கல்வியே எமக்கான வழிகாட்டியாக அமையும். கசடறக் கற்று, கற்றாங்கு ஒழுகமுற்பட வேண்டும். கல்வி அழகே அழகு எனும் நாலடியார் கூறும் நல்லுரையை நன்கு மனதிற் கொண்டு செயற்படுவோம்.

**பாத்திமா றாயிதா பாறூக்**
**ஒல்லிக்குளம்**

# வாழ வந்தோம்

கருவறை கடந்து வந்தோம்
கண்ணீரைக் கொஞ்சம்
ரசித்துக் கொண்டோம்
புன்னகையில் நினைவெழுதி நின்றோம்

பாரிலே பாரமானோம்
கடுகு குணம் கொண்டு
நாம் காரமானோம்
பொய்களை மிச்சமாய் சேமித்தோம்
அநீதியின் பக்கம் அஞ்சாமல் நடந்தோம்
அத்தனையும் மறந்தோம்

முட்களாய் பிறர் பாதையை அடைத்தோம்
சொற்களால் பிறர் மனதை உடைத்தோம்
நில்லாத உலகிலே
பொல்லாத செயல் கொண்டு
பெரும் பாவியாகினோம்
பெருமைக்காய் வீண் வள்ளலானோம்
அத்தனையும் மறைத்தோம்

மெய்களுக்கெல்லாம் விரோதிகளானோம்
பொய்களுக்கெல்லாம் சாட்சிகளானோம்
குறுக்கு வழியில் கோடிக்கு மாரடித்தோம்
இறைவனை மறந்தோம்
அவனுக்கே இணையாய்
இடைத்தரகர்களைக் கொண்டு வந்தோம்

பாரில் நடக்கும் பாதகங்கள்
பார்த்து நடந்தோம்
தெருவில் அரங்கேறும் கொடுமைகளைக்
கண்டும் காணாது விரண்டோடோம்

கண்கள் இருந்தும் குருடர்களானோம்
காதுகளிருந்தும் செவிடர்களானோம்
வாய் இருந்தும் ஊமையர்களானோம்
மனமிருந்தும் மறுத்தோம்
சாட்சி நீயே என மறந்தோம்

**ஏறூர் நிலாத் தோழி**
**பாத்திமா அஸ்க்கியா முபாறக்**





கண்ணில் தோன்றும் ஏக்கம்
கலங்கி நிற்கும் இதயங்கள்
கடந்து வந்த இன்னல்
களங்காமல் செய்த பாவம்– இன்று
கடல் தாண்டி வந்து
கொரோனா எனும் தாண்டவம்
ஆடயிலே உணர்ந்தோம்
எம் மரண தினத்தை......

இரு கரம் ஏந்தி
இறைவனை வணங்குகிறோம்
இன்னும் அவன் இரங்கவில்லை
இறப்புகளும் குறையவில்லை......

டி.எப். அஸ்ரா
அநுராதபுரம்



சில நேரங்களில் ஆண்கள்
அழகாகத் தெரிவார்கள்...
தோற்றத்தினால் அல்ல
பேச்சினால் அல்ல அவர்கள்
அவர்களாக
இருப்பதால்தான்...

ஐ.எம். அயாஸ்
அநுராதபுரம்



# திருநங்கை

ஆணாகப் பிறந்தால்
கம்பீரமென்பர்
பெண்ணாகப் பிறந்தால்
கண்ணியமென்பர்
ஆணும் பெண்ணும்
கலந்த நீயோ
வாழும்
அற்புதமென்பேன்...

உணர்வும் அறிவும்
மோதும்போது
ஆணும் பெண்ணும்
படுகிறது பாடோ
அந்தோ பரிதாபம்,

ஆனால்

நீயோ...

ஆணும் பூண்டு
பெண்ணும் பூண்டு
இயற்கை விதியில்
இயல்பை மிஞ்சினாய்...

வன்மை கொண்ட
ஆணைப்பார்த்து
மென்மை
இரைஞ்சும்
இந்த உலகம்

மென்மை கொண்ட
பெண்ணிடமோ
வன்மை கொஞ்சம்
சேர்த்திடக் கெஞ்சும்,

வன்மை மென்மை
இரண்டறக் கலந்த
நீயோ வானில்
மிதக்கும் மஞ்சம்...

ஆண்மை கலந்த
பெண்மை நீ
இழிவாயுன்னை
நினைக்காதே...

பெண்மை கொண்ட
ஆண்மை நீ
இகழ்வாயுன்னை
நினையாதே...

இறைவன் தந்த
சோதனையிது
தண்டனையென்று
கருதாதே...

சோதனைக்கூட
உலகின் வாழ்வில்
அனைத்துமிங்கு
சோதனை தான்,

பார்வையின்றி பரிதாபத்தில் சிலர்,

கால்கள் இழந்து
கட்டிலோடு சிலர்,

இருதய நோயில்
இமைக்கும் உயிரோடு சிலர்,

சோதனைகள் இங்கு பல விதம்...

அவரவர் கண்ணுக்கு
அவரவர் காயமே
பெரிதாய்த் தெரியும்...

உனக்கு உந்தன் காயம்
பெரிது,
நீயும் மனிதன் முதலில்
உணரு...

இத்தனையற்புதம்
கொண்ட உன்னை
ஒதுக்கும் மாந்தரின்
உள்ளம் குருடு...

கலங்காதே...

அழுக்குச் சொற்களால் தளராதே...

காலக்கொடுமையால்

நல்ல ஆண்களை
விரல்விட்டுத்
தான்
என்னியதுண்டு...

சிறந்த பெண்களை
அரிதினுமரிதாய்
தான்
கண்டதுண்டு...

இரண்டறக்கலந்த
உன்னை ஒதுக்க,
உலகிற்கெங்கு அருகதையுண்டு..?

ஆணவள் நீ

பெண்ணவன் நீ

மொத்தத்தில்
அற்புதப் படைப்பு நீ

அற்புதப் படைப்பு நீ

---------------------

**முஹம்மத் பிர்னாஸ்**
**கல்-எளிய**



# விழித்தெழு

உணர்வுகளை மாசுபடுத்தும் இசையை உன்
நண்பனாக்கிக் கொள்ளாதே ! ... அதை வெறுத்துப்
பகைவனாக்கிடு உன் மரணம் வரை ! ...

உன் செவிகளில் ஈயம் காய்ச்சி ஊற்றப்படுவதற்கு , நீயே
காரணமாகி விடாதே ! ... ஒரு சிறு எறும்பின் கடியைக்
கூட உன்னால் தாங்க முடியாதல்லவா ?...

கொதிக்கும் ஈயக் கரைசலை எப்படி தாங்கிக்
கொள்வாய் ! ... இப் பூவுலகம் அழியும் காலமும்
நெருங்கி விட்டதடா ! இதில் உன் வாழ் நாள் எவ்வளவு
என்பதை ஒருபோதும் நீ அறிய மாட்டாயடா ! ...

நேரத்தை வீணடித்து , டிக் டாக் பார்ப்பதும் பதிவிடுவதும்
தான் உனது வேலையா ? ...
உன் வாழ் நாள் குறைந்து செல்வது உனக்கு
தெரியவில்லையா ?...

அடுத்து வரும் பாடல் என்ன என்று எதிர்பாராதே !
அடுத்த வினாடி உன் நிலை என்ன என்று எண்ணிப்பார் ! ...

உன் வாழ்க்கையை இசையோடு கலந்து நாசமாக்கி
விடாதே ! ...
உன் இறுதி முடிவு மோசமாகி விடும் !...

ஈன்றெடுத்த தாயும் ஏரெடுத்து பார்க்க மாட்டாளடா !
அந் நாளில் சுய நலமே அனைவருக்கும் சொந்தமடா !..
கரும்பு தின்னக் கைக் கூலி வேண்டுமா ?...
இனியவனே ! இசையைக் கேட்காதே !
இறை வசனங்கள் ஓதக் கேள் ! ...

இசை தான் உன் செவிகளுக்கு இனியது என்றால்,
இறை வசனங்களையும் சற்று செவி தாழ்த்திக் கேட்டுப்பார் !
... அதில் உணரும் இன்பம் வேறெதிலும் இல்லையடா ! ...

உள்ளங்களை ஈர்க்கும் வண்ணம் பாடல்களை
எழுதுவதும் இசையமைப்பதும் திறமை என்றால்,
இறைவன் தடுத்ததை வெறுத்து ஒதுக்கி பொறுமை காத்து
வாழ்வது, அனைத்திலும் பெருமை !...

இனியவனே !...

ஆபாசங்களை பார்ப்பதை விட்டும் உன் விழிகள்
விரைவில் உறங்கி விடட்டும் ! இறைவன் தடுத்ததை
செய்வதை விட்டும் உன் கரங்கள் உன் பின்னே ஒழிந்து
கொள்ளட்டும் ! ...

தீயதை பேசுவதை விட்டும் உன் நாவு ஊமையாகட்டும் !
இனியவனே ! என்றும் என் அன்பிற்கு உறியவனே !

நலவுகளை கூறுவதில் மாத்திரம் உன் குரல் உலகெங்கும்
ஓங்கி ஒலிக்கட்டும் ! தகாதவைகளை கேட்பதை விட்டும்
உன் செவிகள் தூர விலகிச் செல்லட்டும் ! உன் வாழ்க்கை
ஓர் இலட்சியத்தை நோக்கிய பயணமாகும் ... அதை
அலட்சியம் செய்து விடாதே ! ...

உன் வாழ் நாளை மண் குதிரை போல் மாற்றி , ஆற்றில்
விட்டு விடாதே ! மாறாக,
அதை படகாக மாற்றிடு,
விரைவில் கரை சேருவாய் ! ...

**கமால் முஸ்தபா ஆசிதா பேகம்**
**கல்பிட்டி , புத்தளம்**



# என் நன்றிகள்..!

என்னை எத்தனை பேருக்குத்
தெரியும்???..
எனக்கு எத்தனை பேரைத்தான்
தெரியும்???..
ஆனாலும்,
தெரிந்திருந்து என்ன பயன்???..
எல்லோருமே எல்லோரிடமுமே
தேவையை மட்டும் தானே,
நிவர்த்தி செய்கிறோம்!!!!...

எனக்கு,
பிறரில் என்ன தேவை???..
என்னில்,
பிறருக்கு என்ன தேவை???..
தேவை எதுவும் இல்லையென்றால்
தெரிந்திருக்கத் தேவையில்லையே!!!!...

உனக்கும் எனக்கும் சொந்தமென்ன,
என்னில் உனக்கு உரிமையென்ன???..
எப்படித் தெரிந்தோம் – ஆனால்,
எப்படியும் பிரிவோம்!!!!...
எனக்குத் தெரியும்,
என்னை தெரிந்து கொண்டவர்கள்
எல்லோருமே,
என்னை
புரிந்து கொண்டவர்கள் இல்லை....
ஏன் தெரியுமா???..
சிலநேரம்,
என்னையே எனக்குப்
புரிவதில்லை!!!!...

தினம் தினம் கரையேறும்
கடலலைகள் போல்,
என் – வாழ்விலும்
தினம் தினம் பல முகங்கள் தோன்றி –
மறைந்து கொண்டேயிருக்கின்றன....
அவை நிலைத்திருப்பது
நிச்சயமில்லை!!!!...

ஆனால்,
மாற்றங்கள் மட்டுமே
நிரந்தரமான இப்பூமியில்,
சில உறவுகள்
சில நேரங்களில்
நிரந்தரமாகலாம்.... – அவை
எம்மில் எந்நேரமும்
எதிர்ப்படலாம்!!!!...

அப்படி எதிர்ப்பட்ட,
எதிர்ப்படப்போகும்,
அத்தனை உறவுகளுக்கும்
என் நன்றிகள் உரித்தாகும்,
என் அன்பைப் போலவே!!!!...

**இளம் தாரகை**
**ஷஹ்னா ஸப்வான்**



# பேசும் பொருளாய் நானிருப்பேன் !

பக்குவமாய் அனுதினமும்
பள்ளி சென்று படித்திடுவேன்
பணிவென்னும் மகுடம் சூட்டி
பலர் போற்ற வாழ்ந்திடுவேன் !

பாசம் என்னும் கயிறு கொண்டு
பாரில் உயிர்கள் வாழ வைப்பேன்
பாராட்டும் பரிசும் பெற்று
பாவை என்னைப் புகழ வைப்பேன் !

பிறந்த போது மகிழ்ந்த தாய்க்கு
பிறவிப் பயனை வழங்கிடுவேன்
பின் நாளில் பலரும் என் புகழ்
பிதற்ற வைத்து அகம் மகிழ்வேன் !

பீதியின்றி உலகில் வாழ்வேன்
பீனிக்ஸ் பறவை போல் வருவேன் !

புடம் போட்ட பொன் போல்
புது ஒளி நான் பரப்பிடுவேன்
புனிதம் காக்க பொய்மை கண்டால்
புயல் போல நான்வருவேன் !

பூமித் தாயின் பொருமை போல
பூவை நானும் பொருந்திடுவேன்
பூத்துக் குழுங்கும் நந்தவனப்
பூக்கள் போல மணம் தருவேன் !

பெண்ணின் புகழ் பாரோங்கி
பெருமை கொள்ளச் செய்திடுவேன்
பெட்டிப் பாம்பாய் பெண்ணடக்கும்
பெண்ணடிமை நான் கலைவேன் !

பேதை எந்தன் நாமம் தான்
பேரும் புகழும் பெற்று விடும்
பேணிக் காப்பேன் ஒழுக்கத்தை
பேசும் பொருளாய் நானிருப்பேன் !

**இஷ்ரா பர்வின்**
களு /அல்ஹம்ரா ம.வி.
A/L கலைப்பிரிவு, தர்கா நகர்.

# சாவு மணி



கொரோனா
விறுவிறுப்பான தனது
ஆட்டத்தை
ஆடிக் கொண்டிருக்கிறது
இரண்டு இன்னிங்ஸ் தான்
ஆட அனுமதி
இங்கே
மூன்றாவது இன்னிங்ஸையும்
ஆடிக் கொண்டிருக்கிறது

விக்கட்டுக்களை
வீழ்த்துவது போல்
பார்வையாளர்
எங்களையல்லவா வீழ்த்துகிறது

கொரோனா
வீசிய பந்துகளில்
பல லட்ச உயிர் விக்கட்டுக்கள்
வீழ்ந்து விட்டதை
நினைக்கும் போது
பெரும்
கவலையாக இருக்கிறது.

உலகின்
தலை சிறந்த வீரர்கள்
உலகையே
அளறித் துடிக்க வைத்த
வீரர்கள்
தன்னுடைய
துணிச்சலான ஆட்டத்தால்
எத்தனையோ நாடுகளை
மண்டியிட வைத்த
வீர சூரர்கள் இருந்தும்
கொரோனாவுடனான
ஆட்டத்தில் படு தோல்வி

எந்த மைதானங்களில்
விளையாடினாலும்
அடுத்தடுத்து
உயிர் விக்கட்டுக்களை
வீழ்த்துகிறது
அது தான் அதன்
தனிச் சாமர்த்தியம்

செய்வதறியாது
விழி பிதுங்கிப் போய்
கிடந்த
உலக சுகாதார அமைப்பு
தடுப்பூசி
கண்டு பிடித்து விட்டார்கள்
என்று
அறிவித்ததும் தான்
கொஞ்சம்
தெம்பு வந்தது போல்
இருக்கிறது

உலக மக்கள்
சனத் தொகையை
குறைப்பதற்காக
யாரோ
ஏவி விட்ட அம்பு
என்கிறார்கள்
இதில் ஏதும்
வம்பு இருக்குமோ
என்றும் ஆராய்கிறார்கள்

தடுப்பூசிகளோடு
கிளம்பி விட்டார்கள்
அணி திரண்டு
இது கொரோனாவுக்கு
சாவு மணியாக
இருக்க வேண்டும் என்று
இறைவனை பிரார்த்திப்போம்!

**எம். வஸீர்**
**வாழைத்தோட்டம்**

# அறியா வயதினிலே அமர்களம் வாழ்வினில்



தோள் கொடுக்கும் தந்தையின் தோள்
சாயுமுன்பே தூய இறைவன் தன் பக்கம்
கொண்டான்.

நினைவுகள் என்னுள் பதியுமுன்பே
நிரந்தரமாய் அழைத்துக் கொண்டான்.

நான்கு வயதல்லவோ... நல்லது எது,
கெட்டது எது, தெரியுமா என்ன ?.

ஆசைப்பட்டதை அடம்பிடித்து வாங்கிடும்
வயதாயினும், தந்தையை எழுந்திருக்கச்
சொல்லி அடம்பிடிக்கத் தவறிவிட்டேனே....
அடம்பிடித்திருந்தால் இறைவன் தந்தையை
திருப்பித் தந்திருப்பானோ என்னவோ.!

ஆசைகள் சொல்லி அழ ஆதரவாய் இல்லாமல்
அனாதையாய் நிற்களாயினேன்.

அறியா வயதாயினும், என் கண் முன்னே
இறந்ததாலோ என்னவோ, கண்ணினின்றும்
மறையாமல் நிற்கிறார் இன்னும்,

உற்றார்கள் சுற்றி நிற்க, சுமுகமாய்
உயிரைப்பறித்துக் கொண்டான் ஏக இறைவன்,

அவன் கொடுத்த உயிரல்லவோ திருப்பி
எடுப்பதும் அவன் இஷ்டமே,
கஷ்டமின்றி அவர் உயிர் போனது என்
இஷ்டமின்றி......

மரணித்த தந்தையின் உடல் வீட்டினுள் இருக்க,
வீட்டின் நாற்புறமும் சுற்றி விளையாடினேன்,
தந்தையின் பிரிவை அறியாத நான்....

பாசமிகு தாயை தனிமையில் கண் கலங்கிக்
கண்டேன், அறியா வயதல்லவோ, அனுதாபம்
அணுவளவும் இல்லை.....

இறைவா ! எங்களை ஏன் பிரித்தாய்,
நலவொன்று வைத்திருப்பாய், இருந்தும்
மனம் ஏங்குது பாசத்திற்காய்.....

கதறி அழத் தோன்றிடினும்
கண்ணீரை மறைத்து
உள்ளுக்குள் உருகுகிறேன்...

இறைவா ! என் தந்தையின் பாவங்களை
மன்னித்து, உன்னிடத்தில் உயர்ந்த சுவனத்தை
கொடுத்திடு நாயனே....

**முஸ்னி முர்ஷித்**
**எஹலியகொட**



# தலையே இல்லாத போது தலைப்பாகை எதற்கு?

சாஜித் வஹாப் (நளீமி)

அவசர வேலை நிமித்தம் இரண்டு முறை தொலைப்பேசி அழைப்பெடுத்துவிட்டேன். ஆனால் ஹகீம் அதற்குப் பதிலளிப்பதாகத் தெரியவில்லை. மூன்றாவது முறையாக அழைப்பெடுக்க மனம் விரும்பவில்லை. அது அவ்வளவு நாகரிகமாகவும் தெரியவில்லை. "ஏதாவது வேலையாக இருப்பான்" என்று விட்டு விட்டேன்.

சில மணி நேரங்களில் ஹகீமிடம் இருந்து அழைப்பு வரவே எடுத்து "என்னடா! இப்ப பெரிய பிஸி மேன் எனா!" என்றேன் நகைச்சுவையாக.

அவன் கூறிய பதில் என் சிரித்த முகத்தைக் கவலையால் படரச் செய்தது.

அவனுடன் பேசி முடித்து இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. ஆனால் அவன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் என் மனதை முழுமையாகக் குடைந்துக் கொண்டே இருந்தது. மேசையில் கிடந்த புத்தகங்களுக்கு நடுவே ஒழிந்திருந்த ஆக்கப் புத்தகத்தைத் தேடி எடுத்துப் பேனையோடு உறவாடச் செய்தேன்.

கடந்த மூன்று நாட்களாக எதிர்வீட்டு ஷாபிறா மாமியின் மூன்று மகன்மாரும் சண்டையிடும் சத்தத்தை என் அறையில் இருந்து நன்றாகச் செவிமடுக்க முடியுமாக இருக்கிறது. பல போது ஷாபிறா மாமி மீது ஓர் எரிச்சல் ஏற்பட்டாலும் "நமக்கேன் வம்பு!" என்று பொறுமையோடு இருந்து விடுகிறேன்.

ஆனால் இன்று அம்மூவருக்குமிடையிலான வாய்த்தர்க்கம் எனக்கு ரொம்பவே எரிச்சலைத் தர, "இன்று ஒரு கை பார்க்க வேண்டும்" என்று கோபக் கனைகளோடு அனாதையாகக் கிடந்த பாதணிகளை லாவகமாகப் போட்டுக் கொண்டு ஷாபிறா மாமியின் வீட்டுக்குச் சென்றேன்.

உள்வீட்டுப் போர்க்களம் நன்றாகவே சூடு பிடித்திருந்தது. "அஸ்ஸலாமு அலைக்கும்.. என்ன சத்தம்?" என்றவாறு வீட்டு வாசலில் நுழைய இளையவளும் கிளிப்பிள்ளையுமான சாபினா ஏதோ பேயறைந்தது போல ஒரு மூலையில் இருக்க, "என்னடா! என்னாச்சு உனக்கு" என்று அவளைத் தூக்கினேன்.
இதழோரம் மெல்லிய புன்னகையொன்றைப் பரிசளித்தாள்.

நான் வந்ததை அறிந்ததும் போர்க்களம் அமைதி காக்கவே "என்ன மாமி! ஒரே சண்ட சத்தம்.. ஊரே வந்துடும் போல.." என்றேன்.

"என்னத்த சொல்ல! என்று ஏக்கத்துடன் பெருமூச்சு விட்டவளாக, இப்ப பாடசாலையும் இல்ல தானே! வீட்டுக்குள் இருந்தா இப்படித்தான்.. ஒரே சண்டை.. எனக்குக் கத்திக் கத்தி வாய்தான் வலி" என்றாள் மெதுவாக.

"இப்ப பாடசாலை நடக்காவிட்டாலும் வகுப்புகள் நடைபெறுகின்றனவே!" என்றேன். சிறிது நேரம் மௌனம் தாண்டவமாடியது.

"அதற்குத்தான் இந்த சண்டையே" என்றாள் ஷாபிறா மாமி ஏக்கத்துடன்.

"என்ன வகுப்புக்குச் சண்டையா?" என்று ஆச்சரியத்துடன் நோக்கினேன்.

"இருக்கிறது ஒரு போன். மூன்று பேருக்கும் ஒரே நேரத்தில் வகுப்புகள் நடக்குது.. யார் எந்த நேரத்தில் வகுப்புக்குப் போறது என்றுதான் பிரச்சினையே.."

"என்ன பண்ண? மூத்தவனுக்குக் கொடுத்தால் அவன் அழுகிறான். இவனுக்குக் கொடுத்தால் இந்த இரண்டும் அழுது..
நமட நிலைமைய எங்கு போய் சொல்றது?" என்று கூறி முடிக்கும் போது எனது நெஞ்சத்தில் ரணங்களின் கணம் அதிகரித்துருந்தது. அவளது மனதின் குமுறல்களை முழுமையாகக் கூறி முடிக்கவில்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

"இப்ப வகுப்புகள் நடக்கிற நேரம் தானே! மூத்தவன் இங்க படிக்கட்டும். அடுத்த ரெண்டு பேரும் வாங்க, நான் போன் தாரேன்.." என்று வீட்டிற்கு அழைத்து வந்து எனது இரண்டு தொலைபேசிகளையும் செயற்படுத்திக் கொடுக்க அதன் மூலம் அவர்கள் படித்து விட்டுச் செல்கிறார்கள்..

"அதனால் தான்டா ஒன்ட போனுக்கு பதிலளிக்க முடியல.. மன்னிச்சிக்கோ டா.." என்றான் ஹகீம்.

அவனுக்குப் பதில் கூற உகந்த பதிலேதும் சிந்தனைக்கு எட்டவில்லை. ஆனையொன்று ஏறி மிதித்தாற் போல் ஆழ்மனதில் வலிகளின் மேகக் கூட்டம் படர்ந்துக் கொண்டிருந்தன.

zoom வகுப்புகள் இலவசமாகவோ, குறைந்த கட்டணத்திலோ என பற்பல வகைகளில் இடம்பெறுகின்றன. அந்த zoom வகுப்புகளுக்கு ரீலோட் கட்டணங்களை இலவசமாக வழங்குவதற்கும் பல உன்னதமான கரங்கள் பல தரப்பட்ட அமைப்புகளில் கைகொடுக்கின்றன.

ஆனால் தலையே இல்லாத போது தலைப்பாகை எதற்கு என்பது போல தொலைபேசியே இல்லாமல் தவிக்கும் ஏழைகளின் கையறு நிலைக்கு இவ்வாறான zoom வகுப்புகள் நடந்தால் என்ன? ரீலோட் கட்டணங்கள் கொடுத்தால் என்ன?

இவ்வாறான பல பிரச்சினைகளுக்குத் தீர்வு எப்போது வரும்? என்று காத்திருந்து ஏமாற்றமடைவது தான் நம் கதி. அதிகார மட்டத்திலிருந்து அடிமட்டம் வரையுள்ள சமூகப் போராளிகளின் உன்னதமான போக்கு அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் கிளை பிரச்சினைகளில் தொங்கிக் கொண்டிருப்பதாகும். யாரைக் குறை சொல்வது என்று தெரியாமல் என்னை நானே திட்டிக் கொள்ளத் தான் முடிகிறது. மாற்றத்திற்கு ஏற்ப மாற வேண்டுமெனில் அதற்கான வசதி வாய்ப்புகளும் வேண்டுமல்லவா!

கனத்த இதயத்துடன் ஆக்கத்தை எழுதி முடிக்கையில் whatsapp குறுஞ்செய்தியொன்று என் கைபேசிக்கு வரவே எடுத்துப் பார்த்தேன். நேற்றைய இரவு செய்த BBQ புகைப்படமொன்று குடும்பக் குழுமத்தில் பகிரப்பட்டிருந்தது.




# போட்டி நிபந்தனைகள்

1. வயதெல்லை (10 முதல் 20 வரை)

2.ஆண்/பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.


3.ஒருவர் தாம் விரும்பும் ஏதாவது ஒரு அல்குர்ஆன் சூறாவை பார்க்காமல் ஓதி 5 நிமிடத்திற்கு மேற்படாதவாறு காணொளியாச் செய்து அனுப்ப வேண்டும்.

4.எந்த நாட்டிலிருந்தும் பங்குபற்றலாம்.

5.உங்களால் அனுப்பி வைக்கப்படும் காணொளிகளை எமது யூடியூப் தளத்தில் பதிவிடுவோம் அதில் கூடுதலான பார்வையாளர்களை பெறும் போட்டியாளர்களுக்கு 50 புள்ளிகளும், மீதி 50 புள்ளிகளும் நடுவர்களால் தீர்மானிக்கப்படும்.

6.தஜ்வீத் முறைப்படி இருத்தல் வேண்டும்.

7.உங்கள் காணொளியினை அனுப்பி வைக்கும் போது அதனுடன் பெயர்,முகவரி,தொலைபேசி இலக்கம் என்பவற்றையும் அனுப்பி வைக்கவும்.



# யார் சொன்னது..!

நான் மாத்திரம்
இரவில் உறங்காமல் விழித்துக்
கொண்டிருக்கிறேன் என்று...!???????

என் வீட்டு முற்றத்தில் படர்ந்திருக்கும்
அழகிய மல்லிகையும் நிலவோடு
காதல் செய்துகொண்டு உறங்காமல்தான்
விழித்திருக்கிறது.

இரவின் அமைதியை தன் ரீங்கார ஓசையால்
கலங்கடித்துக் கொண்டிருக்கும் சில்வண்டுகளும்
உறங்காமல்தான் விழித்திருக்கின்றன.

எங்கேயோ..!தூரத்தில் தன் குரையலால்
பலபேரின் நிம்மதியான உறக்கத்தை தட்டிப்
பறித்துக் கொண்டிருக்கும் வள்வள்களும்
உறங்காமல்தான் விழித்திருக்கின்றன.

ஏதோ..! அசைவதைக்கண்டு அலறலால்
ஒப்பாரிவைத்து ஊரைக் கூட்டிக் கொண்டிருக்கும்
ஆட்காட்டியும் உறங்காமல்தான்
விழித்திருக்கிறது.

இரவின் இருளை அழித்துக் காட்டுகிறேன்
என்ற சபதத்தோடு தன்னொளியை கக்கிக்
கொண்டிருக்கும் இரவுலக ராஜா.அந்த
அம்புலியும் உறங்காமல்தான் விழித்திருக்கிறது.

வானத்தின் சிறு மச்சங்களைப் போல் இருந்து
கொண்டு நிலவின் அழகை விஞ்சிட போட்டி
போட்டுக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களும்
உறங்காமல்தான் விழித்திருக்கின்றன.

நாடோடிகளைப்போல் இங்கும் அங்கும் ஓயாமல்,
ஓரிடத்தில் தங்காமல் ஓடிக்கொண்டிருக்கும்
கார்மேகங்களும்
உறங்காமல்தான் விழித்திருக்கின்றன.

காற்றின் அணைப்பை அள்ளிக் கொண்டு
ஆனந்தமாய் ஆடிக்கொண்டு மகிழ்ச்சியை
வெளிப்படுத்திக் கொண்டிருக்கும்
பச்சையம் கொண்டவைகளும் உறங்காமல்தான்
விழித்திருக்கின்றன.

இரவில் சிறைகூடம் ஏறுவதை நினைந்து
தலைவனைப் பிரிந்த தலைவியைப்போல
கத்தலால் தன்னிலையை உணர்த்திக் கொண்டிருக்கும்
பக்கத்து வீட்டு கோழிகளும்
உறங்காமல்தான் விழித்திருக்கின்றன.

பாவமறியா சிறுபிள்ளையைப்போல் கத்திக்
கொண்டு இரவுணவைத் தேடுவதில் தன்
வேட்டையை ஆரம்பித்திருக்கும் அந்த கடுவன்
பூனையும் உறங்காமல்தான் விழித்திருக்கிறது.

எதிரிகளின் கோரப்பிடிக்குள் சிக்காமல்
நரித்தந்திரத்தால் என் தாயின் சமையலறையில்
உணவை லாவகமாய் களவாடிக்கொண்டு தன்
இருப்பிடத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கும் அந்த
மூஞ்செலியும் உறங்காமல்தான் விழித்திருக்கிறது

காதல் கடலில் மூங்கி காதலர்களின் காதலோடு
பரவசமாய்,ஆனந்தமாய், அழகாய்,அமைதியாய்
கலந்து கொண்டிருக்கும் காதல்காரர்களும்
உறங்காமல்தான் விழித்திருக்கிறார்கள்

என் அறைச் சுவற்றில் இருந்து கொண்டு என்
வரிகளுக்கு "ஆமா" போட்டுக் கொண்டிருக்கும் அந்த
வாலறுந்த முதலைப்பல்லியும் உறங்காமல்தான்
விழித்திருக்கிறது.

இத்தனையும் உறக்கத்தைத் தொலைத்து
இன்பமாய் இரவோடு நேசம்கொண்டு வாழ்கின்ற
போது....நான் மட்டும்.....

எம்மாத்திரம்.......

**சுமைல் ஹரீஸ்**





# புன்னகை

உலக மாந்தர்கள் தன்னிடையே பரிசளிக்கும் மிகப் பெரிய பொக்கிஷம் புன்னகை. உலகில் இறைவன் படைத்த எந்த ஒரு படைப்பும் கொடுக்காது மனிதர்களுக்கு மட்டும் வரப்பிரசாதமாய் கொடுத்தது இந்த புன்னைகையைத்தான். மனிதன் எளிதில் மற்றவனுக்கு பரிசளிக்கும் ஒரு உன்னதமான வெளிப்பாடு புன்னகையாகத்தான் தான் இருக்க முடியும்.

எவ்வளவு மன உளைச்சல்கள் கோபங்கள் மனக்கசப்புகள் இருந்தாலும் சிலருடைய புன்னகை அது அத்தனைகளையும் மறக்கடிக்கச் செய்து மன்னிப்பவர்களாகவும் இரக்க மனம் உள்ளவர்களாகவும் பலரை மாற்றியமைக்கிறது. புன்னகை தொடர்பாக நிபுணர்கள் பல கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

புன்னகை செய்வதன் வாயிலாக மனஅமைதியும் தெளிவான சிந்தனையோட்டமும் கிடைக்கிறது. மனித உள்ளங்கள் ஓர்நிலைப் படுவதற்கு புன்னகை பெரும் பங்கினை வகிக்கிறது.

மேலும் அமைதிக்கு உண்டான சகல பயிற்சிகளையும் விட புன்னகை அவைகளை மிஞ்சி செயற்படுகிறது. புன்னகை எவ்வளவு சிரமத்தில் சிக்குண்ட ஒருவரையும் எளிதில் மாற்றி அமைத்து அவருக்கான மன அழுத்தத்தை குறைக்க உதவுகிறது. உலகிலுள்ள எந்த மருத்துவராலும் அதேபோன்று எந்த மருந்தாலும் தர முடியாது பல நன்மைகளை இந்த புன்னகையால் மட்டும்தான் கொடுக்க முடிகிறது.

“துன்பத்திலும் புன்னகை செய்யுங்கள்” என்று எம் முன்னோர்கள் சொல்லி கேள்விப்பட்டதுண்டு. இதனூடாக நாம் எப்போதும் புன்னகைப்பவர்களாக மட்டுமே இருக்க வேண்டும்.

எம்முடைய உள்ளமானது அனுதினமும் எமது உணர்வுகளான கோபம், மகிழ்ச்சி, சந்தோஷம் அன்பு இவைகளை வெளிகாட்டிக் கொண்டே தான் இருக்கிறது. கோபமாக இருந்தாலும் சரி சந்தோஷமாக இருந்தாலும் சரி அவற்றை எங்களுடைய முகங்கள் பிறருக்கு காட்டிக் கொடுத்து விடுகிறது. இன்னும் எமது செயற்பாடுகளும் அதற்கேற்றவாறு அரங்கேற்றப்படுகிறது.

கோபமாக இருக்கின்ற ஒரு நபரால் கோபமான வெளிப்பாடுகளையே வெளிகாட்ட முடியும்.

உள்ளம் மகிழ்ச்சியாக இருக்கின்ற ஒருவரால்மட்டுமே மகிழ்வான வெழிபாடுகளை வெளிக்காட்ட இயலுகிறது. ஆனாலும் எந்த நிலையிலும் எமது வெளிப்பாடு புன்னகையாக இருக்குமானால், பல முரண்பாடுகளுக்கும் முகக்கசப்புகளுக்கும் நிச்சயமாக முற்றுப்புள்ளி வைக்க முடியும். நான் சொல்கிறேன் எவருடைய உள்ளத்தில் அழுக்குகள் இல்லையோ எவர் பொறாமை, வஞ்சகம் போன்ற கெட்ட குணங்களற்ற தூய்மையானவராக இருக்கிறாரோ அவரால் மட்டுமே புன்னகைக்க முடியும்.

இன்று எம்மிடையே எம் சமூகம் புன்சிரிப்பு உள்ளவர்களை அதிகம் நேசிக்கிறது, அவர்களுக்கான அங்கீகாரத்தை வெளி உலகிற்கு பறைசாற்றுகிறது. விடாப்பிடியாக அதிகம் கோபத்தை வெளிகாட்டுகின்ற பலரை இன்று எம் சமூகம் சிடு மூஞ்சிக்காரன், மூர்க்கன், கோபக்காரன் போன்ற பல புனைப் பெயர்களை சூட்டி சமூகத்தில் மட்டுப்படுத்தி வைத்திருக்கிறது.

புன்சிரிப்பும் மலர்ந்த முகமும் இன்று எம் இடையே அளவீட்டுக் கருவிகளாகவே காணப்படுகிறது. நாம் அதிகம் நேசிப்பவர்களான பெற்றோர்கள், மனைவி, பிள்ளைகள், நண்பர்கள் என்றும் புன் சிரிப்புடன் சந்தோசமாக இருப்பதையே நாம் விரும்புகிறோம். இது மகிழ்ச்சிகரமான வாழ்விற்கு வழிவகிக்கிறது.

நன்றாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் நகைச்சுவைகளால் மட்டும் ஒருபோதும் நாங்கள் புன்னகையை எதிர்பார்க்க முடியாது.
ஆனால் இன்று புன்னகையை வரவழைக்கும் ஒரு கருவியாக நகைச்சுவை மாறிவிட்டது. புன்னகை செய்வதற்கு எந்தவித கருவிகளோ செயற்பாடுகளோ தாக்கம் செலுத்தத் தேவையில்லை.

உதாரணமாக வீதியில் விளையாடும் ஒரு சிறு பிள்ளையை பார்த்து எமது முகங்கள் புன்முறுவல் செய்கிறது இது ஒரு இயற்கையே., எமக்குத் தெரிந்த ஒருவரை நீண்ட நாட்களுக்குப்பின் சந்திக்கின்ற நேரத்தில் முகம் மலர்ந்து புன்முறுவல் செய்கிறோம், பௌர்ணமி தினத்தில் முழு நிலவை வானில் பார்த்ததும் எமது முகங்கள் மலர்ந்து புன்முறுவல் செய்கிறோம். ஆனால் இவைகள் அனைத்தும் நகைச்சுவைக்குள் அடங்காதவை இருந்தும் கூட நாங்கள் புன்முறுவல் செய்ய தவறுவது கிடையாது.

குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், அலுவலகத்தின் சக ஊழியர்கள் உள்ளிட்டோரிடம் மகிழ்ச்சியாகப் பழகுவதன் மூலமாக புன்னகை புரிவதை நமக்குள் கொண்டு வந்துவிடமுடியும். நாம் புன்னகை புரிவதால் நமக்கு மட்டும் அதன் பலன் கிடைக்காமல் நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் கிடைக்கிறது.

ஆகவே கவலைகளை விட்டு புன்னகைப்பவர்களாக மாறுவோம். அன்றாடம் எம்மை விட்டுக் கடந்து போகும் எமது நொடிகளை சந்தோஷமானதாகக் கடத்துவோம்.

**கவிப்பொய்கை**
**ஜவ்சன் அஹமட்**



# உதாசீனம்



ஒரு விஷயத்தை நன்றாக தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

அடுத்தவர்களை காயப்படுத்துபவர்கள், மனதை புண்படுத்துபவர்கள், பிறர் அன்பை புரிந்து கொள்ளாமல் உதாசீனப்படுத்துபவர்கள் எல்லாம் “நல்லவர்களே கிடையாது” என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

அப்படிப்பட்ட மக்களின் செயலுக்கு நாம் ஏன் மதிப்புக் கொடுக்க வேண்டும்?

மரியாதை கிடைக்க வேண்டும் என்பதற்காகவா நாம் இவ்வுலகில் உயிர் வாழ்கிறோம்?

பிறர் மரியாதை கொடுத்தால் தான் உணவு, உடை இருப்பிடம் போன்றவை கிடைக்குமா என்ன??
ரப்பிடம் நம் கண்ணியத்தின் நிலை என்ன என்ற நினைவு நம்மை வழிநடத்தினால் சரி.

**மா. மு சக்கின் மூதூர்**

# நீங்காத் துன்பம்



வாட்டும் வறுமை தீரவில்லை
வாய்த்த வசதி எதுவுமில்லை
வாழ்க்கை வாழ வழியுமில்லை
வழுக்கும் பாதை முடியவில்லை

இணையக் கல்வியில் இணையவில்லை
இதற்கு வறுமை
விடவுமில்லை
இழந்த பாடம்
மீட்டவில்லை
இருந்தும் கற்க இளைக்கவில்லை

தொலைந்த சுகங்கள்
மறக்கவில்லை
அலைந்த பாதை
முடியவில்லை
கலைந்த கனவுகள்
என்னிடமில்லை
சிதைந்த உள்ளம்
சீராகவில்லை

தேடிய செல்வம்
கிடைத்திடவில்லை
நாடிய சொந்தம்
உதவிடவில்லை
வாடிய எமக்கு
துணையிங்கில்லை
நீடிய துன்பம்
நீங்கிடவில்லை

**எம்.எச்.எம்.மின்ஹாஜ்**
**மதுராப்புர, வெலிகம.**

# மனமே!

மனமே!
மதி மயங்கித் தவிக்காதே!
நாளைய உன் விதிகள்
சரித்திரமாய் எழுதத் துவங்கும் நாள்
தனிலே,
நாட்புறமும் உன்னை
மானிடர் சூழ்ந்து நிற்க,
நடிகர்களாய் உன்னிலே வலம் வந்து,
நாட்டம் கொண்டு, வாட்டிச் சென்ற
பலரும்
செய்வதறியாது,
தலை கவிழ்ந்து,
நிலம் பார்த்து,
உன் நிழலையும் பார்க்க இயலாது
தவிப்பர்.

காலம் வெருண்டோடும்
கதி கலங்கச் செய்தோருக்கும்
காரியங்கள் யாவும்
களிப்பினிலே முடிவுறும் என்பது,
அவர்கள் எண்ணமாக இருக்கலாம்.
ஆனால்,
அநீதியிலே ஆறுதல் அவாகாசம் ஏது?
அவன் படைத்தவன் நோக்குகிறான்
அல்லவா?


உனது உயிர்,
எவன் வசம்?
உன் உருவம்
எவன் வசம்?
உன் ஆரோக்கியம்
எவன் வசம்?
உன் வாழ்க்கைத் திட்டமிடல்கள்
எவன் வசம்?
சிந்தித்துப்பார்!
அது உன் வசமா?
இல்லை என் வசமா?
அனைத்தும் அவன் வசம் இருக்கும்
போது,
கைவசமில்லா வெறும் வலிகளையே
ஊட்டிச் சென்ற சந்தர்ப்பங்களுக்காக
ஏன் இந்த அவஸ்த்தை.

மனமுள்ள இடத்திலே
இடமுண்டு என்பார்கள்.
மருவி, மாசுற்று
மகிழ்வினையே
உருவிச் சென்ற களமதிலே,
அறிவென்ன?
அழகென்ன?
பணமென்ன?
எல்லாம் பித்துப் பிடித்து
பிறரையும் மாய்த்து விடுமல்லவா?

கலப்படமில்லா உன்
தூய்மையான அன்பிற்கு,
தகுந்த தருணங்களை
தாராளமாகவே வழிசமைத்து,
வானத்து மேகங்களும் இன்புற்று
களிப்புறும் வகையில்
வசந்தத்தினையே சுகந்தமாய்
வடிவமைத்து விடுவான்.
அகிலத்தின் அரசனவன்.

வலி யாவருக்கும் பொதுவானது.
எனக்கென்றால் அது வலி.
உனக்கென்றால் அது?
இவ்வாறு சிந்திக்கும்
யாராக இருந்தாலும் அவர்களுக்கு
நிச்சயம்
அதன் உஷ்ணத்தை
ஓர் தடவையேனும்
உணரவைக்காது இறைவன் விட்டு
விடுவதில்லை.

காயங்களை மறந்து விடு.
வடுக்களெல்லாம் இன்றோடு வற்றி
விடட்டும்.
தட்டிக் கழித்தோருக்கு விட்டுக்
கொடுத்தாய்!
எண்ணிக்கொள்!
உண்மையும் அது தான்.
தொடும் தூரம்
விடி வானம்
உனக்காகவே காத்துக் கிடக்கிறது.



அப்துல் வாஹித் பாதிமா முனீரா
சில்மியா புர



# எழுத்துக் கற்பித்தவர்கள்

சந்தோஷங்களை மட்டுமே முழுவதுமாய் அனுபவித்து அதிகமதிகமாய் அரண் செய்யப்பட்ட பாதுகாப்பான இடத்தில் எந்த சுமையும் இன்றி சுகமாய் வாழ்ந்த வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்து எதிர்காலம் எனும் போராட்ட பூமிக்கு என்னை தயார்ப்படுத்தும் பொறுப்பு என் பெற்றோரால் பாலர் பாடசாலை ஆசிரியரின் கையில் ஒப்படைக்கப்பட்ட நாளில் துவங்கிய பந்தம் இன்றுவரை நீள்கிறது. எழுத்துக் கற்பித்த ஆசிரியர்கள் தான் வாழக் கற்பித்தவர்களும் கூட. என் பெற்றோருக்கு பிறகு ஆச்சரியமாய் என் விழியிரண்டும் வியந்து பார்த்தது ஆசிரியர்களை தான்.

பாலர் பாடசாலை தொடக்கம் ஐந்தாம் வகுப்பு முடியும் வரையில் நாம் காண்கின்ற உலகம் அன்பால் மட்டுமே அழகுற அலங்கரிக்கப்பட்டிருக்கும். அந்த நாட்களை மீட்டிப் பார்க்கையில் பல ஆனந்தங்களைத் தவிர எந்த சோகமும் கோபமும் நினைவில் இல்லை.
இன்றைய சோகங்களை இன்றோடு புதைத்துவிட்டு இன்றே சிரிக்கும் அற்புத ஆற்றல் அந்த வயதுக்கே உரித்தான தனிச்சிறப்பென்றே கூறலாம்.
அந்த நாட்களில் என் கரம் பிடித்து எழுதக் கற்பித்த என் ஆசிரியைகளின் அரவணைப்பில் உம்மாவின் பாசத்தையே உணர்ந்தேன்.

என் முதலாம் வகுப்பு ஆசிரியையை முதல் புத்தக வெளியீட்டிற்காக அழைக்கச் சென்றிருந்தேன்.
வருடங்கள் கனதியாக ஓடிவிட்டதே தவிர அவர் அன்பில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.
முதல்நாள் பாடசாலையில் நுழைந்த போது பொம்மைகளை வைத்துக்கொண்டு எங்களோடு விளையாடி, நாங்க சமைத்த போலியான உணவுகளை எல்லாம் சிரித்துக் கொண்டே ருசி பார்த்த எங்க டீச்சராத் தான் இப்பவும் இருக்காங்க.

அதே சிரிப்பு அதே அக்கறை எதுவுமே மாறல்ல. என் கன்னத்துல முத்தமிட்டு எனக்காக துஆ செஞ்சி “இன்னுமா டீச்சர ஞாபகம் வெச்சிட்டு ஈக்குற” ன்டு கேட்டப்போ கண்ணீர் மட்டுமே பதிலாயிற்று. கற்பித்தது ஒரு எழுத்தாயினும் கற்பித்தவர் என் ஆசான் தானே. கால ஓட்டத்தில் வாழக் கற்றுத்தந்த ஆசிரியர்களை மறந்துவிட்டோம் என்றால் நாமெல்லாம் என்ன மனிதர்கள்.

பெரிதாக எதுவும் செய்துவிட வேண்டியதில்லை சாலையில் எப்போதாவது எதிர்ப்பட்டால் தெரியாதவர்கள் போல கடந்து சென்று விடாமல் ஒரு புன்னகையை பதிந்து மனதார சில வார்த்தைகளால் நலம் விசாரித்து விட்டுச் செல்லுங்கள். என்ன செய்வதென்று தெரியாமல் அமர்ந்திருக்கும் அமைதியான நாளொன்றில் ஒரு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி நலம் விசாரியுங்கள். இந்த வாழ்வை வாழக் கற்றுத்தந்தவர்களே அவர்கள் தான் என்பதை மறவாது வாழுங்கள்.

**சஹீரா சமீர்**



# Mind Set மனநிலை

வாழ்க்கையின் பாதையில் அதன் போக்கில் ஓடிக் கொண்டிருக்கும் நாம் சற்று நின்று சிந்திக்க வேண்டிய தருணமாக இதனை காண்கின்றேன். அதன் அடிப்படையில் பொதுவான மனித வாழ்க்கை ஓட்டத்தின்பால் சில நாழிகைகள் எமது கவனத்தை செலுத்துவோம். ஒரு மனிதனாக பிறந்து பலவகையான பருவங்களை கடந்து வரும் நாம் பல வண்ணங்களை காட்டும் எண்ணங்களையும் எம்முள் செயன்முறைபடுத்துகிறோம். மேலும் வயதுக்கேற்ற வகையில் சிந்தனை, செயற்பாடு, தோற்றம் போன்றவை அமையப்பெற்று நாம் முன்னேற வேண்டும் என்பதே சமூகத்தின் எண்ணம்.

இதனடிப்படையில் முதலாவதாக குழந்தையாக எமது பெற்றோர் எம்மை கைகளில் ஏந்துவர். அதனையடுத்து முன் பள்ளிக்குள் காலடி எடுத்து வைக்கிறோம். தொடர்ந்து பாடசாலை எனும் முறைமைக்குள் செல்கிறோம். அங்கு இப்போது மணி அடித்தால் பாடசாலை துவங்கும், எப்போது மணி அடித்தால் பாடசாலையில் இருந்து வெளியேற முடியும் என்ற ஒரு கட்டுக்கோப்பான முறைமைக்கு கட்டுப்படுகின்றோம். மேலும் பேனை பிடித்து எழுதுவது முதல் யாரோடு எவ்வாறு பேச வேண்டும், பழக வேண்டும் என்னும் முறையை கற்றுக் கொள்கிறோம். புள்ளிகளின் அடிப்படையில் நாம் மதிப்பிடப்படுகிறோம். ஒரு எழுத்துப் பரீட்சையின் ஊடாக உயர் தரத்திற்கு தரமேற்றபடுகிறோம். அதனைத் தொடர்ந்து உயர்கல்வி, மேலும் பெண்பிள்ளையாய் இருந்தால் வயது வந்தவுடன் திருமணம், ஆண்பிள்ளையாயின் பொறுப்பு வந்தவுடன் திருமணம். அதனையடுத்து ஒரு வருடத்திற்குள் குழந்தை, தொடர்ந்து ஒரு குடும்பத்தை வழிநடத்த வேண்டும். இப்படி ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையும் ஆரம்பித்து இன்னும் பல மனிதர்களின் வாழ்க்கையை செதுக்கும் பணியை கச்சிதமாக செய்து முடிப்பதில் நிறைவடைகிறது.

இதுதான் சமூகம் எதிர்பார்க்கும் பொதுவான வாழ்க்கை முறைமை. இதற்கு இன்னுமொரு பெயர் வைக்கலாம் அதுதான் சமூகத்தின் எதிர்பார்ப்பு/ சமூகத்தின் Mind Set. மனித வாழ்க்கையில் மேலே நான் குறிப்பிட்ட முறைமையை உடைக்கும் வகையில் இடையூறாக அல்லது அசாதாரணமாக ஏதாவது அமைந்து விடுமானால் அது மனிதர்களுக்கு கஷ்டத்தையும், கவலையையும், ஏமாற்றத்தையும் அளிக்கின்றது.

உதாரணமாக: ஒரு குழந்தை பிறந்துஅதன் வளர்ச்சியில் குறைபாடு கண்டால் "அந்தோ பரிதாபம்" என்கிறோம். பாடசாலையில் பரீட்சையில் புள்ளிகளை மிகக்குறைவாக பெற்ற மாணவனை "இவன் மக்கு" என முத்திரை குத்திவிடுகிறோம். உயர் தரத்திற்கு தகுதி பெறாத மாணவனை ஆற்றல்கள் அற்றவனாக காண்கிறோம். உயர்தரத்தில் சித்தி பெறாத மாணவனின் "எதிர்காலமே கேள்விக்குறியோ?" என சிந்திக்கிறோம். ஒரு ஊனமுற்ற குழந்தை பிறந்துவிட்டால் "ஐயோ பாவம்" என்கிறோம். திருமணம் முடித்து குழந்தை பிறக்க தாமதித்து விட்டால் "ஏனோ இன்னும் குழந்தை இல்லை" என பரிதாபப்படுகிறோம். சமூகத்தால் நிர்ணயிக்கப்பட்ட திருமண வயதை ஆணோ, பெண்ணோ கடந்துவிட்டால் அதையும் ஒரு குறையாக காண்கிறோம்.

உண்மை என்னவெனில் நிதானமாக சிந்திக்குமிடத்து மேலே குறிப்பிட்டவை ஒன்றுமே குறைகள்அல்ல. எமது Mind Set இற்கு பொருந்தாதவை அவ்வளவே. இதிலிருந்து நான் கூற வருவது என்னவெனில் எமது Mind Set நாம் மற்றவர்களுக்காக அமைத்துக் கொள்ளக் கூடாது. மற்றவர்களைப் பார்த்து நாம் யாரோ செதுக்கி வைத்த பாதையில் பயணிப்பதை முற்றாகத் தவிர்க்க வேண்டும். மாறாக எமக்காக எமது Mind Set நாம் மாற்றிக்கொள்ளவேண்டும். எமக்காக எமது ஆற்றல்களுக்கு அமைய எமது வாழ்க்கைக்கு பொருத்தமான பாதையை நாமே செதுக்கிக் கொள்ள வேண்டும். இறைவன் எதையும் வீணாக படைக்கவில்லை. ஊனமுற்ற குழந்தை கூட இன்று உயர்ந்து வாழலாம் தனக்காக தனது Mind Set மாற்றிக் கொண்டால், எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறாத மாணவர்கள் கூட இன்று தமது ஆற்றல்களால் முன்னேறலாம் தனது ஆைினெ ளுநவடை மாற்றிக் கொண்டால், குழந்தை ஒரு வரம். வரம் என்பது அனைவருக்கும் கிட்டாது என்னும் எதார்த்தத்தை புரிந்து கொண்டு குழந்தைகள் இல்லாத தம்பதியர் கிடைத்த வரத்தை குப்பையில் தூக்கி போட்ட பெற்றோர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாய் திகழலாம் தனது ஆைினெ ளுநவடை மாற்றிக் கொண்டால், திருமண வயது என்பது யார் நிர்ணயித்தது? நீங்கள் எப்போது திருமணம் செய்கிறீர்களோ அதுதான் உங்களுக்கான வயது என்பதை உணர்ந்து கொள்ளலாம். இன்னும் திருமணம் ஆகாதவர்கள் தனது Mind Set மாற்றிக் கொண்டால், இப்படி இப்படி எத்தனையோ வகையான மாற்றங்களுக்கு வித்திடலாம் எமது ஆைினெ ளுநவடை மாற்றிக்கொண்டால் மட்டுமே.

இன்றைய உலகுக்கு வருவோம். அதாவது நாம் அனைவரும் முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் பாரிய சவாலாக Covid-19 தொற்று காணப்படுகின்றது. அதாவது ஒரு முறைமையில் பயணித்துக் கொண்டிருக்கும் எம்மை முற்று முழுதாக ஒரு மாற்றத்தின் பால் திருப்பி விடுகிறது Covid-19. எமது எதிர்காலம் கேள்விக்குறி என்பதே எமது எண்ணம். ஆம் அது எமது எண்ணமே அதனை மாற்றி அமைக்கும் தருணமும் இதுவே. பிறந்த ஒவ்வொரு மனிதனும் இறந்தே ஆக வேண்டும் இதுவே உலகின் நியதி இதனை மாற்றி அமைக்க முடியாது ஆனால் இன்று எமது Mind Set ஆனது மரணத்தின் பக்கம் எம்மை அழைத்துச் செல்வதாகவே அமைகின்றது. நாம் ஒவ்வொருவரும் எமது Mind Set இதனை மாற்றிக்கொள்ள முடியாது போராடிக் கொண்டிருக்கிறோம். அதுவே Covid-19 தொற்றுக்கான முதன்மை காரணமாக நான் கருதுகிறேன். ஏனெனில் நாளாந்த வாழ்க்கையை மாற்றிக்கொள்ள எமது Mind Set தயாராகவில்லை. இதனாலே Covid-19 தொற்று அதிகரிக்கிறது. சரியான முறையில் எமது Mind Set நாம் மாற்றிக்கொள்ளும் போதே இன்றைய அச்சுறுத்தலான சூழலிருந்து வெளிவரலாம் என்பதை மனதில் இருத்திக் கொள்வோம்.

இதன் அடிப்படையில் வீட்டிலிருந்து படிக்கும் முறைமைகள், வீட்டிலிருந்தே உழைக்கும் முறைமைகள், சுத்தம் பேணும் நடைமுறைகள் போன்ற புதிய மாற்றங்களை ஏற்றுக்கொண்டு, இச் சூழ்நிலைக்கு இசைவாக்கம் அடைந்து, எமது வாழ்க்கையை முன்னேற்றும் மாற்றங்களை உருவாக்குவோம். இவற்றை முழுமனதோடு ஏற்றுக் கொள்வோம். எதிர்காலம் நமக்கு நல்ல விளைவுகளை தரும் என்ற நம்பிக்கையோடு செயல்படுவோம். ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டே போகும் மரணங்களின் எண்ணிக்கையை இன்றிலிருந்து குறைந்து செல்ல வழிவகுப்போம். இதற்காகவே ஒரு புதிய மாற்றத்தை உருவாக்கும் வல்லமையுடனான Mind Set இனை உருவாக்குவோம்.

உங்களுடன் கைகோர்க்கும் சகோதரி

**சபியா அஸாத் - கனேதன்னை**

# அனைத்து பதிப்புகளும் டிஜிட்டல்
# தொழில்நுட்பத்தில் உங்கள் கைகளில்...






**sky தமிழ் NEWS**

தனித்துவமே நமது அடையாளம்

**www.news.skymediasl.com**

**இணையதளத்திற்கு**

**பிரவேசியுங்கள்**

@skytamil.lk

**துணிந்தெழு இதழில் உங்கள்**

**விளம்பரங்களைப் பிரசுரிக்க**

**தொடர்புகளுக்கு**

**077 639 11 88**

**077 247 1464**

9 772792 102002

DESIGN: BASITH JM